விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 28 புதன்கிழமை (12.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வழங்கப்பட்ட அவகாசத்தில் இலங்கை தீர்வு காணவில்லை

## – சீனாவுக்கு கனடா பதிலடி

(ஜெனிவா)

இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்கெனவே மூன்று வருட கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும் எனினும் நாட்டின் மனித உரிமைகளை மீறிய நபர்களை சட்டத்திற்கு முன் கொண்டு வரவில்லை எனவும் கனடா தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை பேரவையில் அமெரிக்கா தலைமையில் 5 நாடுகள் கொண்டு வரும் இலங்கை அரசாங்கம் சம்பந்தமான தீர்மானம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது கலந்துரையாடலில் கனடா இதனைக் கூறியுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சினையை பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தாம் நோக்குவதாகவும் மேலும் எவ்வளவு காலம் காத்திருப்பது என்றும் கனடா கேள்வி எழுப்பியுள்ளது.

30 வருடகால போர் முடிவுக்கு வந்த 5 வருடங்களுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது எனவும் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் சீனா முன்வைத்த யோசனை தொடர்பில் பதிலளிக்கும் போது கனடா இந்த கேள்வியை எழுப்பியது.

சீனாவின் தர்க்கத்தை ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் இதனை பாதிக்கப்பட்டவர்கள் கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கின்றோம்.

19 ஆம் பக்கம் பார்க்க..

# ஐ.நா செயலருக்கு புதிய பேச்சாளர்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளராக மீண்டும் ஸ்டீவன் டுஜாரிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று தமது பதவியை ஏற்று, ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூன், யுக்ரெயின் விவகாரம் தொடர்பில் வெளியிட்டிருந்த அறிக்கையை வாசித்தார்.

எனினும் அவர் இலங்கை தொடர்பில் எழுப்பப்பட்ட

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஆவா குழுவைச் சேர்ந்த 6 பேர் நேற்றுக் கைது

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவந்த ஆவா குறூப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேரை சுன்னாகம் பொலிஸார் நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமிலுள்ள இளைஞர்களுக்கிடையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோஷ்டி மோதல் ஒன்று இடம் பெற்றிருந்தது. இந்த மோதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

20 ஆம் பக்கம் பார்க்க..

## மன்னார் புதைகுழி

# மனித எச்சங்களை ஆய்வு செய்ய அனுமதி

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளுடன் கிடைத்துள்ள தடயப் பொருட்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகளை நடத்துவதற்கான உத்தரவை மன்னார் மாவட்ட நீதிமன்றம் நேற்று வழங்கியிருக்கின்றது.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆராய்ந்த நீதவான் ஆனந்தி கனகரத்தினம் அதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்றார்.

20 ஆம் பக்கம் பார்க்க..

# சனல் 4இன் புதிய வீடியோ ஐ.நாவுக்கு எதுவும் தெரியாதாம்

(ஜெனிவா)

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றிருந்த போது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்ததை சித்திரித்துக் காட்டும் சனல் 4 தொலைக்காட்சி சர்ச்சைக்குரிய புதிய காணொளி குறித்து தனக்கு எதுவுமே தெரியாதென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற நாளாந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் காணொளி

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இலங்கையில் பொதுவாக்கெடுப்பு

## கருணாநிதி அறிவிப்பு



(சென்னை)

ஈழத் தமிழர் நலன் காக்க இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.


மக்களவை தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கையை கருணாநிதி சென்னை அறிவாலயத்தில் பத்திரிகையாளர் சந்திப்பின போது வெளியிட்டார். இதன்போதே அதனை அவர் கூறினார்.

மத்திய அரசில் அங்கம் வகித்த திமுக தமிழகத்திற்கு செய்த நன்மைகளை பட்டியலிட்டு 100 தலைப்புகளில் தேர்தல் அறிக்கையை அவர் வெளியிட்டார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் போட்டியிடும் திமுக வேட்பா

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஜி.எல்.பீரிஸ் - கமலேஷ் சர்மா லண்டனில் சந்தித்துப் பேச்சு



(லண்டன்)

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று லண்டனில் வைத்து பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாளை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதியாக அமைச்சர் பீரிஸ் நிகழ்வில் பங்கேற்றார்.

இதன்போதே நேற்று இருவருக்கும் இடையில் லண்டனில் உள்ள மார்ல்பொரோவ் இல்லத்தில் வைத்து சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது பொது

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஐ.ம.சு. கூட்டமைப்பிலிருந்து கமலேந்திரன் இடைநிறுத்தம்

## அமைச்சர் சுசில் அறிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவினால் தனக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கமலேந்தி

20 ஆம் பக்கம் பார்க்க..

# இந். மீனவர்களுக்கு மறியல் நீடிப்பு



யாழ்ப்பாணம் சிறையில் உள்ள ராமேஸ்வரம் மீனவர்கள் 38 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஊர்க்காவற்றுறை நீதிமன்றத்தில் மீனவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை மார்ச் 25-ம் திகதிவரை விளக்கமறியலில்

20 ஆம் பக்கம் பார்க்க..

# ரணிலை சந்தித்தார் சந்திரிகா முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் சந்தித்து பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று முற்பகல் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதியின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தெற்காசிய கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கண்காணிப்பு திட்டம் தொடர்பான அறிக்கையை கையளித்த



பின்னரே சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையில் பிரதான மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த கண்காணிப்பு திட்ட அறிக்கை

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்களுடன் பிரான்ஸ் தூதுவர் சந்திப்பு



(கிளிநொச்சி)

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்போல்மொன்சு வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் அலுவலகமான அறிவகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது, போரின் பின்னால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார, உடல், உளரீதியான பாதிப்புக்கள் பற்றி விரிவாக தூதுவருக்கு விளக்கப்பட்டது.

குறிப்பாக பெண்கள், குழந்தைகள், மாணவர்கள் எதிர்கொள்கின்ற மந்தபோசாக்கு நிலைமைகள் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய விசேட தேவை உள்ளவர்களின் தேவைகள் நிலைமைகள் கல்வி, வைத்தியத்துறையில் நிலவுகின்ற வளப்பற்றாக்குறைகள் நெருக்கடிகள் மற்றும் தமிழர்களின் தீர்வாக கருதப்படமுடியாத 13ஆவது திருத்தச்சட்டம் அதன் கீழான அதிகாரம் இன்மைகள் அவை ஆளுனரின் பிடிக்குள் இன்னமும் இருந்து நெருக்கடியான சூழலை ஏற்படுத்துதல் தொடர்பாகவும் பிரான்ஸ் தூதுவருக்கு எடுத்து விளக்கப்பட்டது.

போர் காரணமாக பெருமளவில் சிதைந்தும் அழிந்தும் போன வடமாகாண உட்கட்டுமானங்களை மீள கட்டியெழுப்புவதற்கு தேவையான ஆலோசனை நிதி என்பவற்றை பிரான்ஸ் அரசாங்கம் பங்களித்து உதவவேண்டுமென அமைச்சர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அத்தோடு வடமாகாண சபையால் நடத்த திட்டமிட்டுள்ள கல்வி ஆராய்ச்சி மாநாடு தொடர்பாகவும் திட்டமிட்டு தமிழர் காணிகள் அபகரிக்கப்படுகின்றமை தொடர்பாகவும் ஆதாரங்களுடன் எடுத்து விளக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பழைய பூங்கா வீதி தற்காலிகமாக மூடப்படல்

(யாழ்ப்பாணம்)

சென்.பரியோவான் கல்லூரியின வருடாந்த துடுப்பாட்ட போட்டிகள் கல்லூரிமைதானத்தில்எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 வரை பழைய பூங்கா வீதி தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும என்பதனையும் பொதுமக்கள் மாற்றுப்பாதையினை பயன்படுத்துமாறும் மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் அறியத்தந்துள்ளார். (எ-11)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

**உடன் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம் மேலதிக 03 அச்சுக்களுடனும் 500 அச்சுப் பலகைகளுடனும் விற்பனைக்கு உண்டு. கடைக்குரிய கதவு நிலை 02 உடன் விற்பனைக்குண்டு. 0774366704 (சி-6730)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை தும்பளை றோட்டிற்கு அருகில் நி.பர (ஒன்று குளி 04) விஸ்தீரணமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. (சி-6730)

தொடர்புகளுக்கு : 0774366704

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஞாயிறன்று

## 6 ஆயிரம் பேர் பங்கு பற்றுவர் !

(கச்சதீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் நெடுந்தீவுப்பிரதேச செயலகம், வேலணைப்பிரதேச செயலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர், நெடுந்தீவுப் பங்குத்தந்தை ஆகியோர் இணைந்து இவ்விழா ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இம்முறை இத்திருவிழாவிற்கு இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து அண்ணளவாக 6000 வரையான யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் குடி நீர், உணவு, சுகாதாரம், மலசலகூடம், அவசர மருத்துவம் உட்பட ஏனைய விடயங்களிலும் இலங்கை கடற்படையினரும் உரிய அரச திணைக்களங்களும் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

திருவிழாவிற்கு பங்குபற்றும் இலங்கை யாத்திரியர்கள் 15ஆம் திகதியில் இருந்து கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ள முடியும். மேலும் யாத்திரிகர்கள் செல்வதற்காக குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு காலை 6.00 மணியிலிருந்து பிற்பகல 2.00 மணிவரை ஒவ்வொரு மணித்தியால இடைவேளையில் படகுச்சேவை இடம் பெறும்.

யாத்திரிகர்களுக்கான ஒரு வழிக் கட்டணமாக குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு 250 ரூபாயும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்கு ஒருவழிக் கட்டணமாக 200 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறியத்தரப்பட்டுள்ளது. 15 ஆம் திகதி காலை 5.00 மணியிலிருந்து யாழ் நகரில இருந்து குறிகாட்டுவானுக்கு பேருந்து சேவை இடம்பெறும்.

கச்சதீவில் நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தின் சிற்றூண்டிச்சாலை மற்றும் நெடுந்தீவுப் பிரதேச சபையின் அனுமதி பெற்று தனியார் விற்பனை நிலையங்களும் அமைக்கப்படும். யாத்திரிகர்களுக்கான குடிநீர் மற்றும் நிரந்தர மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய யாத்திரிகர்களின் தேவை கருதி இலங்கை வங்கியின் கிளை ஒன்றும் கச்சதீவில் இயங்கவுள்ளது. தேவை கருதி சுற்றுலா நீதிமன்று மற்றும் இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் சேவையும் பெறப்பட்டுள்ளது. பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் ஆகியவற்றினை யாத்திரிகர்கள்தம்முடன்எடுத்து வருவது தவிர்க்கப்பட வேண்டுமென அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

**Van விற்பனைக்கு**


நல்ல நிலையில் உள்ள Nissan Caravan KG Model விற்பனைக்குண்டு.

தொடர்பு :- இல.60, அரசடி வீதி யாழ்ப்பாணம்.

T.P :- 077 654 9303

(5797)

# மரண அறிவித்தல்



## கதிரேசு இராசையா

**(ஓய்வுநிலை தொலைபேசி இயக்குநர் யாழ் போதனா வைத்தியசாலை)**

புலோலி தென்மேற்கு, கிணற்றடி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த கதிரேசு இராசையா 11.03.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகமணி (ஓய்வுநிலை எழுதுவினைஞர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை) யின் அன்புக் கணவரும், யோகராசா (LIC காப்புறுதி விற்பனை மேற்பார்வையாளர் யாழ்ப்பாணம்), லலிதா (யா/கரணவாய் மகா வித்தியாலயம்), சுமதி (பிரான்ஸ்), றூபினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலநந்தினி (ஆசிரியை - யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), செல்வராசா (சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் - ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), செங்கோடன் (பிரான்ஸ்), தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனேசன் (ஹாட்லிக் கல்லூரி), லதுசன் (பிரான்ஸ்), பிரணியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.03.2014 புதன் கிழமை பகல் 12.00 மணிக்கு மந்திகை, துறையாமூலை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துறையாமூலை,
முருகன் கோவில் வீதி,
புலோலி வடமேற்கு,
புலோலி.

தகவல் :-
யோகராசா (மகன்)
T.P. :- 077 132 6474
021 226 2463

(C-6731)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## கூலி ஒப்பந்தத்திற்கான கேள்வி அறிவித்தல் - 2014

மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதி வேலைகளுக்கு கூலி ஒப்பந்தம் மூலம் நிறைவேற்றுவதற்கு கூலித்தொகை கோரப்படுகின்றது.

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி 14.03.2014 - 17.03.2014 பி.ப. 12.30 மணி வரை (அலுவலக நேரத்தில்)
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி : 24.03.2014ம் திகதி பி.ப. 12.30 மணிவரை.
3. கேள்விகள் யாவும் 24.03.2014ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப் படும். முடிவு கேள்விச்சபையினதே. அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர் களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

| இல | விபரம் | தொகை |
|---|---|---|
| i | 1 கியூப் 4'' கல் பரவுவதற்கான கூலித் தொகை (வேலைத்தளத்தில் ஏற்றி இறக்குதல் உட்பட) | |
| ii | 1 கியூப் 2'' கல், 3/4'' கல் பரவுவதற்கான கூலித் தொகை (வேலைத்தளத்தில் ஏற்றி இறக்குதல் உட்பட) | |
| iii | 1 பரல் 1 ம் படை தார் ஊற்றுவதற்கு (1/2'' கல் பரவுதல் உட்பட) | |
| iv | 1 பரல் 2 ம் படை தார் ஊற்றுவதற்கு (மணல் பரவுதல் உட்பட) | |

**குறிப்பு :-** வேலைத்தலத்தில் ஏற்றி இறக்கல் உள்ளடங்கலாக வேலைகள் யாவும் சபையின் அறிவுறுத்தலுக்கமைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**திருமதி யோ.பற்குணராஜா**
முதல்வர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-6728)

## மின்சாரக்கட்டண நிலுவைகளை செலுத்துதல் சகல மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

இலங்கை மின்சார சபை யாழ்.பிரதேச அலுவலகத்தினால் சகல மின்பாவனையாளர்களுக்கும் இம்மாதம் 3-ம் திகதி முதல் மின்துண்டிப்புக்கான அறிவிப்பு பத்திரம் Red Notice வழங்கப்பட்டு வருகின்றது. எனவே உடனடியாக நிலுவைப்பணத்தை முற்றாகச் செலுத்தி மின் துண்டிப்பைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறும் பட்சத் தில் 15 ஆம் திகதி முதல் மின்துண்டிப்பு அமுல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள் கிறோம்.

➢ மின்பாவனையாளர்களுக்கு வசதியாக மின்பட்டியல் பணம் செலுத்தப்பட்ட உடன் வரவு வைப்பதற்கு வசதியாக இல.500, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள மின்சாரசபை அலுவலகத்திலும், மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளிலும்) அமைந்துள்ள எமது கருமபீடங்களில் பணத்தை செலுத்த முடியும்.

➢ மின்னிணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின் பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக ரூபாய் 1,000.00 இனை மீளிணைப்பு கட்டணமாக மின்சிட்டையில் செலுத்தப்பட வேண்டும்.

நன்றி

**மின் பொறியியலாளர் யாழ் பிரதேசம்**

**மின் பொறியியலாளர் அலுவலகம் யாழ் பிரதேசம்,**

**இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.**

(C-6729)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ரோஜா

ரோஜாப்பூ என்றதும் நமக்கு நேருவின் நினைவுதான் வரும். ரோஜாவே அழகு. அதை அவர் கோட்டில் குத்தியிருக்கிற நேர்த்தி அதை விட அழகு. பூ என்றால் வாடத்தான் செய்யும். அப்படித்தானே நேரு கோட்டில் இருக்கும் ரோஜாவும் வாடுகிறது. ஆனால் கவிஞர் ஒருத்தர் கற்பனையாக அதற்கு ஒரு காரணம் சொன்னார். அந்த ரோஜா நேருவின் கோட்டில் குத்தப்பட்டதும் அவருடைய முகத்தைப் பார்க்கிறது. அந்த முகத்தோடு அழகுக்கு நமது அழகு ஈடாகவில்லையென்று அது கலலைப்படுகிறது. அந்தக் கவலையிலேயே கொஞ்சம் கொஞ்சமா வாடிப் போய்விடும். இப்போது ரோஜாவைப் பற்றி சில தகவல்களுக்கு வருவோம்.

ரோஜா 'ரோசேசியே' தாவரக்குடும்பத்தைச் சார்ந்தது. மனித இனம் தோன்றுவதற்கு முன்பே ரோஜா இனம் தோன்றி விட்டது. நான்கு கோடி வருடங்களுக்கு முன்பே தோன்றியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். கல்லாகிப் போன ரோஜாச் செடிகளை வைத்து இதை ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் ரோஜா பயிர் செய்யப்பட்டது.ரோமானியர்களுக்கு ரோஜாவை பயிர் செய்து கொடுத்தே எகிப்தியர்கள் நிறைய பணம் சம்பாதித்ததாக வரலாறு சொல்கிறது. உரோமானியர்கள் தங்களுடைய அழகின் கடவுளாகிய வுனஸுக்கும் காதலின் கடவுளான கியூபிட்டுக்கும் ரோஜா மலரைச் சூட்டி மகிழ்ந்தார்கள். பெப்ரவரி 14 காதலர் தினத்தில் சிவப்பு ரோஜா அதிகமாக விற்பனையாவதற்கு உரோமானிய கலாசார பாதிப்புதான் காரணம்.

மனிதன் தான் தோன்றிய காலத்திலிருந்தே ரோஜா மலரை ரசித்து, கொஞ்சி குலாவியிருந்தாலும் 19 ஆம் நூற்றாண்டிலேதான் ரோஜாவில் புதுப்புது இரகங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு தடவை மலரும் திடமான ஐரோப்பா வகைகளையும், எப்போதும் மலரும் மென்மையான ஆசிய வகைகளையும் ஒட்டுச் சேர்த்து புது இரகங்களை உருவாக்கியிருக்கிறார்கள். உலகத்தில் இப்போது 13 ஆயிரம் இரகங்களுக்கு மேல் இருக்கிறது. இந்தியாவில் 2,500க்கு மேலான இரகங்கள் இருக்கிறது.

நேராக நிமிர்ந்து வளரும் ரோஜா, பூமியில் படர்ந்து வளர்ந்து வேலியாகவும், சுவர்களை மறைக்கும் வகையிலும் வளரும் ஒரு வகை ரோஜா, நிலத்திலிருந்து சில அங்குலமே வளரும் ஒருவகை ரோஜா, 45 அடிக்கு மேல் வளரும் கொடி வகை ரோஜா, கொத்தாக மலரும் வகையைச் சேர்ந்த ரோஜா, மனிதனின் முகத்தைக் காட்டிலும் பெரிதாக மலரும் ஒட்டு வகை ரோஜா என்று ரோஜாவில் பல வகைகள் இருக்கிறது. மணமே இல்லாத ரோஜா பூக்களும் உண்டு. அதே நேரத்தில் பழங்கள், வாசனைத்திரவியங்கள், தேயிலை, தேன் போன்ற வாசனைகளைக் கொடுக்கக்கூடிய ரோஜாக்களும் உண்டு. முள்ளே இல்லாத ரோஜ இரகங்கள் கூட இருக்கிறது.

ஊட்டி நூற்றாண்டு ரோஜா பூங்காவில் பலவகையான வண்ணங்களில் ரோஜாக்களைப் பார்க்கலாம். இப்போது ஊட்டியில் 2,150 இரகங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் பல இரகங்களை வரவழைக்கப் போகிறார்கள்.

இப்படித்தான், ஒரு ரோஜா பூங்காவில் ஒரு வேடிக்கை நடந்தது. ரோஜா மலர்களை யாரும் தொட்டுப் பார்த்து சேதப்படுத்தக்கூடாது என்பதற்காக அறிவிப்புப் பலகைகளை அங்கே வைத்திருந்தார்கள். அதில் ஒன்று 'வாச ரோஜா வாடிப் போகலாமா?' என்று எழுதியிருந்தது.

தமிழ் விற்பன்னர் ஒருத்தர் தன் மனைவியோடு அங்கே போயிருந்தார். அவர் மனைவி பேர் சரோஜா. பார்த்தது போதும், சீக்கிரமாக வீட்டுக்குப் போகலாம் என்று தன் மனைவிக்கு உணர்த்த நினைத்த அவர், அந்த அறிவிப்பை, "வா சரோஜா வாடி போகலாமா?" என்று வாசித்தார். சரோஜா என்பது அவர் மனைவியுடைய பெயர் என்பதால் சரியாகப் போய்விட்டது.அது வேறு யாருடைய பெயராயிருந்தால் விவகாரம் தானே!

*இளசை சுந்தரம்*

# நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கு மூன்று மாத கால பயிற்சி நெறி ஆரம்பம்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திற்கு 129 புதிய கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

புதிய கிராம சேவையாளர்களுக்கான நியமனம் அண்மையில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது. அவர்களில் 129 பேர் யாழ். மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களுக்கும் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பயிற்சிகள் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் ஆரம்பமாகின.

அந்தவகையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு 3 பேரும் சங்கானைக்கு 7 பேரும் சண்டிலிப்பாய்க்கு 7 பேரும் தெல்லிப்பழைக்கு 8 பேரும் உடுவிலுக்கு 12 பேரும கோப்பாய்க்கு 6 பேரும் கரவெட்டிக்கு 12 பேரும் மருதங்கேணிக்கு 9 பேரும் பருதத்துறைக்கு 13 பேரும சாவகச்சேரிக்கு 18 பேரும் நல்லூருக்கு 10 பேரும் யாழப்பாணத்துக்கு 12 பேரும வேலணைக்கு 8 பேரும் நெடுந்தீவுக்கு 3 பேரும் காரைநகருக்கு ஒருவர் உட்பட 129 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மூன்று மாதம் ஆரம்ப பயிற்சி நெறிகள் வழங்குவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுளளது. இதனடிப்படையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் முதலாவது பயிற்சி நெறி ஆரம்பமானது.

மேற்படி மூன்று மாத பயிற்சியின போது மூவாயிரம் ரூபா வேதனம் வழங்கப்படவுள்ளது. மூன்று மாத பயிற்சி பெற்ற பின்னர் இரண்டு வாரங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றிய பின்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் கடமையாறறுவதற்கான நியமனங்கள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# புத்தக வெளியீடு

நல்லூர் தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் பேராசிரியர் லி.கே.கணேசலிங்கம் எழுதிய புற்றுநோய் - பல உடல் உறுப்புக்களைப் பாதிக்கும் ஒரு நோய் எனும் நூல் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் உள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் வவுனியா சர்வோதயம் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந் நூலின் விமர்சனங்களை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி டாக்டர் எஸ்.பாலகுமார் , யாழ்.புற்றுநோயாளர் காப்பகத் தலைவர் டாக்டர் என்.சிவராஜா , கோப்பாய் லயன்ஸ் கழகம் டாக்டர் வி.தியாகராஜா , பதுளை , மார்பு நோய் மருத்துவ நிலையம் டாக்டர் எஸ்.யமுனாநந்தா ஆகியோர் கலந்து கொண்டு வழங்கவுள்ளனர். (2)

# பொருளியல் பாட கருத்தரங்கு

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பொருளியல் பாட கருத்தங்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இடம் பெறவுள்ளதாக வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.தேவதாஸ் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் பெறுபேற்று மட்டத்தை உயர்த்தும் நோக்கில் வவுனியா தெற்கு வலயத்தின் ஏற்பாட்டில் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு வலயங்களைச் சேர்நத பொருளியல் பாட மாணவர்களுக்கான இலவச பொருளியல் பாட கருத்தரங்கு சீமா நிறுவனத்தின் அனுசரணையில் பேராதனை பல்கலைக்கழக பொருளியல் பாடவிரிவுரையாளர் எம். கணேசமூர்த்தியை வளவாளராக கொண்டு நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே இதில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.(2-9-250-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 20 |
| உருளைக்கிழங்கு | 90 | 50 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 100 |
| தக்காளி | 20 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 30 | 60 | 40 |
| கரட் | 100 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 50-65 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 40 |
| பயற்றங்காய் | 60 | 130 | 80 |
| லீக்ஸ் | 40 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 100 | 320 |
| போஞ்சி | 50 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 10 | — | — |
| கீரை - 1 பிடி | 05-15 | 10 | 20 |
| தேசிக்காய் | 50-80 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-55 | 50 | 40 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

# இராசி பலன்

12.03.2014
(மாசி 28, புதன்கிழமை )
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 4.45 மணிவரை
பூசம் முழுவதும்
இராகுகாலம் 12.22-1.52 மணிவரை
சுபநேரம் 4.52-6.22 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சி வெற்றி தரும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் கூடும்.

**இடபம்** உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், வழிபாடு காரிய வெற்றி தரும், பெரியோரின் பாராட்டுக்களை பெறுவீர்கள்.

**கடகம்** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை,எடுத்த செயலை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**சிங்கம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சில ஆதாயம் பெறுவீர்கள், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகலாம்,சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** பிரயாணங்களின் போது அவதானம் தேவை, நீங்கள் விசுவாசமாக நினைத்த ஒருவர் உங்களை சந்தேகிக்கலாம், முயற்சிகள் தாமதமாகலாம், சஞ்சலங்கள் கூடும்.

**மகரம்** நினைத்த காரியங்கள் நிறைவேறும், நண்பர்களால் நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான சம்பங்கள் இடம் பெறலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்,குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உறவினரும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மீனம்** தொலைபேசிச் செய்திகள் மகிழ்ச்சி தரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வியபார விருத்திக்காக பாடுபடுவீர்கள், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பெண்களின் பிரவேசம்; வடபகுதியில் அதிகரிக்கப்படவேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவிப்பு

வடபகுதியில் பெண்களும், பெண் தலைமைத்துவ குடும்பங்களும் அதிகளவில் இருக்கின்ற நிலையில் முடிவெடுக்கும் அதிகாரமுள்ள அரசியல் பதவிகளில் பெண்களின் பங்களிப்பு மிகவும் அரிதாகவே உள்ளது. இந் நிலை மாறி அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேசசபையால் கடந்த 8 ஆம் திகதி நடத்தப்பட்ட மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

சுதந்திரம் என்பது சும்மா கிடைத்து விடாது. போராடினால் மாத்திரமே அதைப்பெற்றுக் கொள்ளலாம். பிரெஞ்சுப்புரட்சியின் போது கி.பி 1789ஆம் ஆண்டில் பெண்கள் வீதிக்கு வந்து தமது உரிமைகளை வேண்டிப் போராடினர்.

இன்று கொண்டாடும் மகளிர் தினம் கூட பெணகள் சமஉரிமை, வாக்குரிமை வேண்டி முன்னெடுத்த போராட்டங்களால் கிடைத்த வெற்றியாகும்.


அகிம்சைப்போராட்டத்திலும் சரி, எமது ஆயுதப்போராட்டத்திலும்சரி தமிழ்ப்பெண்கள் அளப்பரிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

ஆயுதப்போராட்டத்தில் பெரும் தளபதிகளாகவும், வீராங்கனைகளாகவும் எமது தமிழ்ப்பெண்களின் பங்களிப்பு குறைத்து மதிப்பிட முடியாது.

பல போராட்டங்களின் வெற்றிக்கு பெண்கள் அணியே காரணமாகவும் இருந்துள்ளதை நாம் மறக்க முடியாது. ஆனால் இன்று பலவழிகளிலும் பல இன்னல்களை எமது பெண்கள் அனுபவித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 224 உள்ளூராட்சி உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 9 பேர் மாத்திரமே பெண்களாவர். அதிலும் சபையின் தவிசாளர்களாக இருவர் உள்ளனர்.

அத்துடன் அவர்களே அதிகளவில் வாக்காளர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் பெண்களின் அரசியல் பிரவேசமானது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகிறது. இந் நிலையை மாற்றப்பட வேண்டும். (2-6)



நன்றி-மிரர்




# பாடசாலை நிகழ்வுகளில் இராணுவத்திற்கு தடை; மாகாண சபையில் பிரேரணை கொண்டு வரப்படும்

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் திணைக்களங்களில் இடம்பெறும் சிவில் நிகழ்வுகளுக்கு இராணுவத்தினரை அழைப்பது முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைகளுடன் கலந்தாலோசித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவத்தினரை பாடசாலை நிகழ்வுகளுக்கு விருந்தினராக அழைப்பதை நிறுத்துவதற்கான விசேட பிரேரணையொன்றினை வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் அவைத் தலைவரால் கொண்டுவர வாய்ப்புள்ளதாகவும் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். அதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே அவைத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டு புதிதாக சபையொன்று உருவாக்கப்பட்ட பின்பும் இராணுவத்தலையீடுகள் அதிகரிக்கப்பட்டு வருவதாக குற்றம்சாட்டப்படுகிறது. இந்நிலையில் வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலை நிகழ்வுகளில் இராணுவத்தினரை விருந்தினராக அழைக்கப்படுவதை நிறுத்த மாகாண சபை அமர்வில் பிரேரணை கொண்டுவரப்பட்டு அது தொடர்பான அறிவித்தல்களை பாடசாலைகளுக்கு விடுவிக்க முடியாதா? என்று ஊடகவியலாளர் ஒருவரினால் கேள்வியெழுப்பட்டது.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் நான் மட்டும் முடிவு செய்யமுடியாது. அவ்வாறு செய்யும் விடயம் அல்ல. எமது கட்சித் தலைமைகள் மற்றும் முதலமைச்சருடன் கலந்துரையாடியே முடிவு எடுக்க வேண்டும்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சிற்கும் இந்த விடயம் தொடர்பிலும் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் எதிர் வரும் வடக்கு மாகாண சபை அமர்வுகளில் இதற்கான தீர்மானம் ஒன்றினைக் கொண்டு வர யோசனை ஒன்றினை முன்வைப்பேன். இவ்வாறான இராணுவ தலையீட்டினால் சுதந்திரமாக செயறபடவோ கருத்துக்களை தெரிவிக்கவோ முடியாத நிலை ஏற்படுகின்றது. இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று பதிலளித்திருந் தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபை செயறபடுவதற்கு முன்னர் பாடசாலை மற்றும் திணைக்களங்களின் நிகழ்வுகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அழைக்கக் கூடாது என வடமாகாண ஆளுநர் கட்டுப்பாடு விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு சர்வதேசத்தை நம்பியிருப்பதில் பயனில்லை

*(யாழ்ப்பாணம்)*

***தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு நாமே தீர்வுகாண வேண்டும். அதனைவிடுத்து சர்வதேச நாடுகளையும் ஜெனீவா அமர்வுகளையும் பிரதானமாக நம்பியிருப்பதனால் எந்தப் பயனுமில்லை என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.***

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதனைவிட அங்கு அவரினால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையிலும் மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு நாமே தீர்வுகாண வேண்டும். அதற்காக சர்வதேச நாடுகளை பிரதானமாக நம்பி பயனில்லை. நாம் ஆரம்பத்தில் இருந்தே தீர்க்கதரிசனமாக கூறி வந்த உண்மை சரியென மறுபடியும் ஒரு முறை உணர்த்தப்பட்டிருக்கின்றன .

அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும்! என்பது போல், எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய பிரதான பொறுப்பு தமிழ் பேசும் கட்சிகளின் தலைமைகளுக்கே உண்டு.

நாம் சர்வதேச நாடுகளை பிரதானமாக நம்பியிருக்க முடியாது. தேவையென்றால், பிரசவத்தின் போது ஒரு மருத்துவிச்சியின் கடமையை ஆற்றுவது போல், சர்வதேச நாடுகள் முன்வந்தால் அதை வரவேற்கலாம்.

ஏனெனில், எமது மக்கள் சுமந்த வலிகளையும், வதைகளையும்நாம்மட்டுமே உணர்வோம்.

எனவே, எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்புணர்வு எமக்கு மட்டுமே இருக்க முடியும்.

இதையே நாம் நீண்ட காலமாக, தொலைதூர நோக்கில், தீர்க்கதரிசனமாகக் கூறி வருகின்றோம்.

ஆனாலும், சர்வதேச நாடுகளின் துணையுடன் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம் என்றும், உலக நாடுகள் எமது பிரச்சினையை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன என்றும் உலக நாடுகளுக்கு எமது ஒற்றுமையின் பலத்தைக் காட்டு தமக்கு மட்டுமே வாக்களியுங்கள் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களுக்கு ஆசை வார்த்தைகளை அள்ளி வழங்கி, தேர்தல் வாக்குறுதிகளாகக் கூறி வந்திருக்கிறது.

ஆனாலும், இன்று நடந்து வரும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா மாநாட்டின் மூலம் எமது மக்களுக்கு எந்த விமோசனங்களும் கிடைக்கப் போவதில்லை என்றும், தாம் நம்பியிருந்த உலக நாடுகள் கைகளை விரித்து, எமது மக்களை ஏமாற்றி விட்டதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீலிக்கண்ணீர் வடித்து, ஊடகங்களுக்கு செய்தி கொடுத்து வருகிறது.

நாம் ஏற்கனவே தீர்க்கதரிசனமாகக் கூறி வந்த உண்மைகளை ஏற்று நடந்திருந்தால், அடுத்தவர்களை நம்பியிருக்காமல் எமது பிரச்சினைகளை நாமே தீர்க்க வேண்டும் என்ற எமது நடைமுறை சாத்திய வழிமுறைகளை விரும்பியிருந்தால், உலக நாடுகள் எமது மக்களை ஏமாற்றி விட்டதாக இன்று அழுது புலம்பி, நாடகம் ஆட வேண்டிய அவசியம் இங்கு நடந்தி ருக்காது.

ஆகவே, சர்வதேச நாடுகளையோ, அன்றி சர்வதேச நாடுகளிடம் முறையிட்டு, எமது மக்களின் எல்லாப் பிரச்சினைகளு க்கும் தீர்வு காண்போம் என்று தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வழங்கி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ இனி ஒரு போதும் நம்பப் போவதில்லை என்ற உண்மையை எமது



மக்கள் மறுபடியும் ஒருமுறை இன்று உணர்ந்து கொண்டுள்ளனர்.

சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்துவோம். வெறும், போலி வீர உணர்ச்சிகள் வேணடாம் என்று முடிவு செய்வோம், சாணக்கிய, தந்திர, மதிநுட்ப சிந்தனைகளால் மட்டுமே எமது அரசியலுரிமைகளை வென்றெடுப்போம்,

உலக நாடுகளிடம் முறையிட்டு, எமது மக்களுக்குத் தீர்வு பெற்றுத் தருவோம் என்ற போலி வாக்குறுதிகளை இனியும் வழங்காமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மதிநுட்ப சிந்தனை வழி நின்று, செயற்பட முன்வர வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-23-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததி பற்றி சிந்திக்கும் ஆட்சியாளரை மின்சார நாற்காலியில் அமர்த்த வேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

பாதைகளை காப்பெற் செய்வதன் மூலம் மக்களின் வயிறு நிரம்பி விடாது என ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த தேர்தலில் தோற்றால் மின்சார நாற்காலியில் அமர நேரிடும் என மக்களிடம்வாக்கு வேட்டையில் ஈடுபடும் ஊழல் மோசடி மிக்க தலைவர், மின்சார நாற்காலியில் அமர்த்தப்பட்டாலும் எவரும் கவலைப்பட மாட்டார்கள். மக்கள் பற்றி எவ்வித கவலையும் இன்றி, தனது சந்ததி பற்றியே சிந்திக்கும் இந்த ஆட்சியாளரை மின்சார நாற்காலியில் அமர்த்த வேண்டும்.

நாட்டை பற்றி சிந்திக்காது மக்களை சுரண்டும் ஆட்சியாளர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும். நாடு அபிவிருத்தி அடைந்துள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது. எனினும், மக்களிடம் பணமில்லை, மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நம்பிக்கையிழந்து வாழ்ந்து வருகின்றனர் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (2)


### உடனடியான தொழில் வாய்ப்பு

இவ்விலக்கத்தை அழைத்தவுடன் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உடனடியான தொழில் வாய்ப்பு. பிரதான தொழிற்சாலைகளான தேயிலை/டொபி/சொலட்/டின்/பெயின்ட்/கிளவுஸ்/ஆடை/டயில்/ ஜேம்/ கோடியல்/ பிஸ்கட் போன்ற தயாரிப்புக்களுக்கு.

+ உற்பத்தி + லேபல் + தரம்பிரித்தல் களஞ்சிய பிரிவு 18-50 வயது ஆண்- பெண் தேவை. உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.

சம்பளம் 18000/=, 25000/=, 32000/=

தொடர்பு. 0776838231

(சி-6724)


# நாடு வரலாறு காணாத அளவில் அபிவிருத்தியில் முன்னேற்றம்

(கொழும்பு)

நாடு வரலாறு காணாத அளவிற்கு அபிவிருத்தி அடைந்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேச பாதை அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது முன்னோர்களினால் ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் போன வீதி அபிவிருத்தி திட்டங்கள் எதிர்கால தலைமுறையினருக்கு செய்து கொடுக்கப்படவுள்ளது.

மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்தின் மூலம் இந்த அபிவிருத்தி ஏற்படுத்தப்படவுள்ளது.

ஆசியாவின் ஆச்சரியத்தை எதிர்கால சந்ததிக்கு துரிதகதியில் ஒப்படைப்பதே அரசாங்கத்தின் இலக்காக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையின் அடுத்த ஜனாதிபதி நாமல்

## ஹிருணிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக நாமல் ராஜபக்ஷவே தெரிவாக வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபைக்கான வேட்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருக்கும் நபர்களில் நான் வெறுப்பது எனது தந்தையை கொலை செய்த துமிந்த சில்வாவை மட்டுமே.

அரசாங்கத்தில் இருப்பவர்களில் ஜனாதிபதி, அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரட்ன, பீலிக்ஸ் பெரேரா, குமார வெல்கம ஆகியோர் எனக்கு விருப்பமானவர்கள்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோசி சேனாநாயக்க, ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் எனக்கு பிடித்தமானவர்கள்.

எதிர்க்கட்சியில் இருக்கும் விருப்பமில்லாத நபர்களை விட ஆளும் கட்சியிலேயே நான் விரும்பாத பலர் உள்ளனர் என ஹிருணிகா குறிப்பிட்டுள்ளார். (2)


### காணி விற்பனைக்கு

புலோலி கிழக்கு பல்லப்பை பருத்தித்துறையில் 10 பரப்பளவு காணி (வெறுங்காணி) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0774200327,
(5794) 0777044923



### ஏல விற்பனை அறிவித்தல்
### போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் 2014/03/27,28 (வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ) ஆகிய இரு தினங்களும் முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இரும்புக்கட்டில்கள் மற்றும் மரக்கட்டில்கள்
2. சில்லுக் கதிரைகள்
3. பழைய மேசைகள் அலுமாரிகள் (ஸ்ரீல்)
4. மர அலுமாரிகள்
5. இரும்பு, மர கதிரைகள்
6. கணனிகள்
7. துவிச்சக்கர வண்டிகள்
8. குளிர்சாதனப் பெட்டிகள்
9. ஏனைய தளபாட உபகரணங்கள்
10 பழைய இரும்பு அலுமினியப் பொருட்கள்
11. உடைந்த தளபாடங்கள்

மேற்படி பொருட்களை 2014.03.26 ஆம் திகதி புதன்கிழமை அன்று முற்பகல் 9.00 இலிருந்து நண்பகல் 12.00 மணிவரை வைத்தியசாலை பழைய பொருட்கள் களஞ்சியத்தில் களஞ்சியப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் மேற்குறிப்பிட்ட தினங்களில் முற்பகல் 10.00 மணியளவில் வைத்தியசாலைக் களஞ்சியத்திற்கு சமூகமளிக்கவும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்தி பொருட்களை அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு முன்னர் வைத்தியசாலை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-6723)



### கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல:- J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013 ஆம் ஆண்டு (28.02.2013) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் 15.04.2014 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

| | |
|---|---|
| இல. 370, | இல. 09, |
| கே.கே.எஸ். வீதி, | கன்னாதிட்டி வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| 0214900311 | 021 222 5046 |

உரிமையாளர்.

(சி-6721)



### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 24 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, CIMA / பிரதம கணக்காளர்<br>தொ.இ: B/2905 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 25 உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: A/L / பகுதிநேர ஆங்கில ஆசிரியர்<br>தொ.இ: G/2901 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 54 செவ் 1 .இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம் (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/2908 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 5.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி / விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/2902 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 51 சூரி செவ் .9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / எழுதுவினைஞர்<br>தொ.இ: B/2909 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 7.5 செவ் 4 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: IAB, HNDA<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/2903 |
| பிறப்பு: 1984 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 20.75 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BSc / வங்கியாளர்<br>தொ.இ: B/2910 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 60.75 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: AAT, CIMA – 2nd Level / Account Asst.<br>தொ.இ: G/2904 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்

## மார்க்சிச-லெனினிசக்கட்சி பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் குறுகிய இலாப அரசியலினை எமது தமிழ்த் தலைவர்கள் உணர வேண்டும்.

அனைவரும் ஒன்றிணைந்தவொரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் எமது உரிமையை நாம் வென்றெடுக்க முடியுமென புதிய ஜனநாயக மார்க்சிச -லெனினிச கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா.செந்தில்வேல் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் ஐக்கிய அமெரிக்கா கொண்டு வர இருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானத்தின் நகல் அறிக்கையை வெளியிட்டதன் மூலம் தனது ஏகாதிபத்திய உள்நோக்க சுயரூபத்தை வெளிக்காட்டியுள்ளது. இதனைப் புரிந்து கொள்ளாது அமெரிக்கா மேற்குலக விசுவாசிகளான தமிழர் தரப்புத் தலைமைகளும் புலம்பெயர்ந்த நாடுகளின் தமிழர் அமைப்புக்களும் ஜெனீவாத் தீர்மானம் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதோ வரப் பிரசாதம் வரப்போவதாக பொய்த்தனமான பிரசாரங்களைச் செய்து வந்தன. இப்போது தாங்கள் ஏமாற்றப்பட்டதாக கவலையும் ஒப்பாரிகளும் வைக்கிறார்கள்.

இது அவர்களது தூர நோக்கமற்ற குறுகிய அரசியலினதும் ஏகாதிபத்தியத்தைப் புரிந்து கொள்ளாத வெள்ளைத்தோல் விசுவாச த்தினதும் வெளிப்பாடேயாகும்.

ஓநாய் தனக்காக அழுகிறதா அல்லது ஆடு நனைவதற்கு அழுகிறதா என்பதை விளங்கிக் கொள்ளாத தமிழர் தரப்புத் தலைமைகளின் அந்நிய விசுவாச அரசியல் வெளிப்பாட்டையே இன்று காண முடிகிறது.

போர்க்குற்றம், மனிதவுரிமை மீறல் பற்றிப் பேசப்படும் இறுதிக்கால யுத்தத்தின் போது அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஏனைய மேற்குலக நாடுகளும் இந்தியாவும் யார் பக்கத்தில் இருந்து வந்தன என்பதை இலகுவில் மறந்து விட்டு அவர்கள் மூலம் ஜெனீவாவில் போர்க்குற்ற விசாரணைக்குத் தீர்மானம் எதிர்பார்த்து நிற்பது அடிக்கப்பொல்லெடுத்துக் கொடுத்தவனிடம் சாட்சி சொல்லக் கேட்பது போன்றதொரு வேடிக்கையானதாகும்.

தீர்வுக்கும் தூரநோக்கிலமைந்த வெகுஜன போராட்ட மார்க்கத்தில் முன்செல்ல வேண்டும். அதில் உழைக்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், பெண்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்போரது அடிப்படைப் பிரச்சினைகளும் பிரதிபலிக்கப்பட வேண்டும்.

அத்தகைய நிலைப்பாடு தெற்கின் சாதாரண உழைக்கும் சிங்கள மக்களிடையே பிரதிபலிப்பையும் அரசியல் தீர்வுக்கான தமிழ் மக்களின் நியாயத்தையும் தோற்றுவிக்க வேண்டும். எனவேதான் தமிழ்த் தரப்புக் கட்சிகள் பதவிகளுக்கான வாக்குப் பெட்டி அரசியலுக்கு அப்பால் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கையில் தேசிய இனங்களுக்கான சுயாட்சியை வென்றெடுப்பதற்கான பொது வேலைத்திட்டத்திற்கு முன்வரல் வேண்டும். இதனை இளம் தலைமுறையினர் தமது கவனத்தில் கொள்வது அவசியம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# ஆக்கப் பொருள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்வை கணபதி பாலர் பாடசாலை மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பெற்றோர்கள், மாணவர்கள், ஆர்வமுடையவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தலைவர் ச.ஜெயகணேஸ் அறிவித்துள்ளார். (2)




கடந்த 40 வருடங்களாக திருமுறைப்பணியை ஆற்றி வந்த அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் எஸ்.கிருஷ்ண மூர்த்தியை யாழ். சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்தி கழகத்தினர், கழகத்தின் 59 ஆவது ஆண்டு விழாவின் போது கௌரவிக்கப்பட்ட வேளை...

# மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிக்காக மஹிந்தவை சந்திக்க விருப்பம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நாட்டில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தெற்காசிய கொள்ளை மற்றும் ஆய்வு நிறுவகத்தின் பொறுப்பாளராக சந்திரிகா கடமையாற்றி வருகின்றார். மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பிலான நிறுவனத்தின் கொள்கைகளை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த சந்திப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதான கட்சிகளின் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக சந்திரிகா தெரிவித்துள்ளார்.

மூன்று மாஹாநாயக்க தேரர்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்களின் பிரதிநிதிகளுடனும் சந்திப்பு நடத்தபபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்திரிகா சந்திக்கவுள்ளார். மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு தொடர்பில் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார். (2)

# தங்கச் சங்கிலி அறுத்த திருடனை மடக்கிப் பிடித்தனர் பொதுமக்கள்

## சங்கிலி மீட்கப்பட்டது

வயோதிபப் பெண்மணியொருவரின் தங்கச் சங்கிலியினை அறுத்து திருடியவர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பின்புற வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியால் தங்கச் சங்கிலி அணிந்தபடி நடந்து வந்த வயோதிப மாதுவின் தங்கச் சங்கிலியை அறுத்த திருடன் அதனை தனது வாய்க்குள் போட்டுக்கொண்டான்.

குறித்த பெண்மணி கூக்குரலிட அப்பகுதியில் திரண்ட பொதுமக்கள் திருடனை துரத்திய போது அவன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்குள் நுழைந்து மலசலகூடத்தினுள் ஒழிந்து கொண்டான்.

தகவல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவ்விடத்திற்கு பொலிஸார் உடனடியாக வரவில்லை.

எனினும் அப்பகுதியால் வந்த இராணுவத்தினர் பிரஸ்தாப திருடனை பிடித்து தமது வாகனத்தில் ஏற்றிச் சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை திருடனின் வாயிலிருந்து தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டது. சம்பவத்தையடுத்து பொலிஸார் யாழ். இந்து ஆரம்பபாடசாலைக்குச் சென்று நிலைமையை கேட்டறிந்தனர். (2-4)

# போதைப்பொருள் வியாபாரிகளை நாடாளுமன்றம் அனுப்பியது மக்களே

## முதலமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நான்கு போதைப் பொருள் வியாபாரிகள் இருப்பதாகவும் இவர்களை தெரிவு செய்து நாடாளுமன்றத் திற்கு அனுப்பியது மக்களே எனவும் ஜே.வி. பியின் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளர் கே.டி. லால்காந்த குறிப்பிட்டுள்ளார்.

அத்துருகிரியவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தற்போது நாடாளுமன்றத்தில் உள்ளனர். இவர்களில் நான்கு பேர் போதைப்பொருள் வியாபாரிகள்.

நாட்டு மக்களே இவர்களை தெரிவு செய்கின்றனர். பணம் சம்பாதிப்பதற்காகவே இன்று அரசியலை தெரிவு செய்கின்றனர்.

பணத்தை உழைக்க அதிகாரம் இருக்க வேண்டும். அதிகாரம் பணத்தை உழைப்பதற்கான அனுமதிப்பத்திரமாக மாறியுள்ளது.

நகர சபை உறுப்பினர் ஒருவருக்கு மாதம் 7 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப் படுகிறது. இந்த 7 ஆயிரம் ரூபா சம்பளத்தில் எப்படி நான்கு வருடங்களில் 7 கோடி ரூபா பெறுமதியான மாளிகையை நிர்மாணிக்க முடியும்?.

அரசியல் இப்படியான இழிநிலைக்கு சென்றுள்ளது. டி.எஸ். சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, பண்டாரநாயக்க போன்றவர்களை நாங்கள் திருடர்கள் என்று கூறுவதில்லை. இவர்களின் ஆட்சிக்காலத்தில் கொள்கை ரீதியான அரசியல் இருந்தது.

ஆனால் இன்று பத்திரிகைகளை எடுத்து பார்த்தால், அரசியல்வாதிகளின் ஊழல், மோசடி, கொள்ளை தொடர்பான செய்திகளே வெளியிடப்படுகின்றன.

பணத்தை உழைப்பதற்கான சிறந்த வழியாக அரசியல் இன்று மாறிவிட்டது என லால் காந்த குறிப்பிட்டுள்ளார். (2)

# நரேந்திரமோடி பிரதமரானால் இந்திய வெளி.கொள்கை மாற்றப்படும்

## யஸ்வந்த் சிங்ஹா தெரிவிப்பு

இந்திய பிரதமராக நரேந்திர மோடி தெரிவானதும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை முற்றாக மாற்றப்படும் என்று பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவரும் முன்னாள வெளியுறவு அமைச்சருமான யஸ் வந்த் சிங்ஹா தெரிவித்துள்ளார்.

மோடி பிரதமரானால், இந்திய அரசாங்கம மாத்திரம் மாற்றமடை யாது. முழுமையாக அரசாங்கததின் தனித்தன்மையும் மாற்றமடையும் என்று சின்ஹா குறிப்பிட்டுள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்று சென் னையில் நடைபெற்ற போதே சின்ஹா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மியன்மாரில் இந்திய பிரதமரும் இலங்கை ஜனாதிபதியுடன் சந்திப்பை நடத்தினர். எனினும் இதன்மூலம் இலங்கையின் வடக்கில் இருந்து படையினரை குறைப்பதோ அல்லது இந்திய மீனவர் பிரச்சினை குறித்தே உரிய தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை என்றும் சின்ஹா குற்றம் சுமத்தினார்.

அனுமான் கடவுளை போன்று எமது பலத்தை உணர வேண்டும். அத்துடன் பாக்கு நீரிணையை துப்பாக்கிகள் இன்றி ரோஜாக்களை கொண்டு இந்தியாவினால் கடக்க முடியும் என்றும் சின்ஹா தெரிவித்தார். (2)

# மெய்வல்லுநர் திறனாய்வு

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சு.சற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களான திருமதி நளினி அகிலாண்டேஸ்வரி, திருமதி ஈஸ்வரி செல்வதயாளன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி சிவஸ்ரீ மு.தயாபரக் குருக்கள், ப.மா.சங்க செயலாளர் கா.சிவசோதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண்வம்பை விலைக்கு வாங்கி மாட்டும் இரண்டாம் எண்காரர்கள் 02

(கடந்த வாரத் தொடர்ச்சி)...

பேச்சுத் திறமையில் வல்லவர்களான இவர்கள் இனிக்க இனிக்க பேசி தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வார்கள். தங்களது பகைவர்களைக் கூட நண்பர்களாக்கிக் கொள்ளும் பேச்சுத் திறமை இவர்களிடம் உண்டு. இந்த எண்காரர்களிடம் இருக்கும் முக்கிய மான ஓர் அம்சம் என்ன தெரியுமா?

எவரையும் கிண்டல் செய்து பேசுவதில் இவர்களுக்கு அலாதியான பிரியம் இருக்கும். அதே போல் அடுத்தவர்களிடம் குறைகண்டு பிடிப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். இன்னும் கொஞ்சம் உடைத்துச் சொல்வதாக இருந்தால் பறக்கிற காக்கையைக் கூட இவர்கள் விட்டு வைக்க' மாட்டார்கள். அதில் கூட ஒரு குறை இருப்பதாக இவர்கள் சொல்லுவார்கள். இவர்கள் என்னதான் கலகலப்பாக பேசினாலும் இவர்களின் உள்ளத்தில் வெளிப்படையாகத் தெரியாத ஒரு துயரம் இருந்து கொண்டே இருக்கும்.

சாந்தமான இயல்பைக் கொண்ட இவர்கள் சிந்தனை சக்தியும் கலை உள்ளமும் கொண்டவர்களாக இருப்பார்கள். அதே நேரம் கற்பனை உலகில் தான் அதிக நேரம் சஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள். இதனால் இவர்கள் செய்கின்ற காரியங்களில் விரைவோ மன உறுதியோ இருக்காது. இவர்களது எண்ணங்களும் செயல்களும் உடலை அதிகமாகச் சாந்திருக்காமல் மனதை சார்ந்திருக்கும்.

இவர்களுக்கு எவ்வளவுதான் கஷ்டம் வந்தாலும் அடுத்தவர்களிடம் அதைக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். அப்படி சொல்வதை ஒரு கௌரவப் பிரச்சினையாகவே கருதுவார்கள். அதேபோல் முற்றிலும் குணமாகாத ஏதோ ஒரு நோயினால் துன்பப்படுவார்கள். இருந்தாலும் அந்த நோயினால் அவர்களுக்கு அவ்வளவு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

உடன் பிறந்தவர்களுக்கு நிறையவே உதவிகளைச் செய்யும் இவர்கள் உயர்வான பல நல்ல விடயங்களைக் கேட்பதில் ஆர்வம் உடையவர்களாக இருப்பார்கள்.

இந்த எண்காரர்கள் ஒரு கலையையோ, தொழிலையோ கற்றுக் கொள்ள விரும்பினால் விரைவிலேயே அதில் தேர்ச்சியும் பெற்று விடுவார்கள். தேவையற்ற செலவுகள் எதையுமே இவர்கள் செய்ய மாட்டார்கள். ஆயிரம் ரூபா கிடைப்பதாக இருந்தால் தான் நூறு ரூபாயைச் செலவு செய்வார்கள். கஞ்சத்தனத்தில் இவர்களை மிஞ்சக் கூடியவர்கள் எவரும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இவர்கள் வாழ்வில் ஒரே தொழிலை மட்டுமே நம்பி இருக்க மாட்டார்கள். அதேபோல் ஒரு கலையில் மட்டுமே வல்லவர்களாக இல்லாமல் பல கலைகளில் வல்லவர்களாக இருப்பார்கள். இதனால் பல வழிகளிலும் இவர்களுக்கு வருவாய் ஊற்றுகள் அதிகரிக்கும்.

புருவம் சற்று உயர்வாக இருக்கும். இவர்களது உடலின் வலப்பக்கத்தில் மச்சம் இருக்கும்.

இவர்களிடம் இருக்கும் மிகப்பெரிய பலவீனம் என்னவென்றால் எந்தக் காரியத்தையும் உடனே செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே போவார்கள். இதனால் அடுத்தவர்களின் வெறுப்புக்கு இவர்கள் ஆளாக நேரிடும். முன் கோபம் அதிகமாக உள்ள இவர்கள் உடலுக்கு சுமை தரும் வேலைகள் எதையும் செய்ய விரும்பமாட்டார்கள். சுகவாசிகளாக வாழத்தான் இவர்கள் அதிகம் விரும்புவார்கள்.

அடிக்கடி எதைப்பற்றியாவது மனக்கோட்டை கட்டிக் கொண்டே இருப்பார்கள். சந்தேகம் என்பது இவர்களின் உடன் பிறந்த குணமாகவே இருக்கும். பலருக்கு எதிர்கால வாழ்வின் சம்பவங்களை எடுத்துக் கூறுவார்கள். ஆனால் தங்களது சொந்த வாழ்வைப்பற்றி அறிய முடியாதவர்களாக இருப்பார்கள்.

வாழ்வில் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகளை எதிர்த்துப் போராடும் சக்தி இவர்களுக்குக் குறைவாகவே இருக்கும். இதனால் இவர்களின் மனம் வெகுவாகப் பாதிக்கப்படுவதால் சிலசமயம் மனநோயாளியாகக் கூட மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

## ஜோதிடக் களம்

இவர்களின் ஒரு சிலர் மிகவும் புகழ் பெற்றவர்களாக இருப்பார்கள். அதேபோல் மற்றவர்களும் இவர்களைப்பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார்கள்.

தன்னுடையதாக இல்லாவிட்டாலும் வேறு யாருடைய பணமாவது இவர்களிடம் இருந்து கொண்டே இருக்கும். சந்திரன் எப்படி சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று பிரகாசிக்கிறதோ அதேபோல்தான் இந்த எண்காரர்களும் பிறர் உதவியின்றி இவர்கள் முன்னுக்கு வரவே முடியாது.

ஆனால் ஒரு காரியத்தில் இறங்கி விட்டால் அந்தக் காரியத்தை முடிக்கும் வரை உண்ணவோ உறங்கவோ மாட்டார்கள்.

தெய்வ நம்பிக்கை மிக்க காந்திஜியும் நம்பிக்கை தளராத ஹிட்லரும் இந்த எண்காரர்கள்தான் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. எந்த ஒரு விடயத்திற்கும் இவர்கள் அஞ்சவே மாட்டார்கள். இவர்களை விட பலசாலிகளாக இருப்பவர்களிடம் கூட இவர்களுக்கு பயம் வராது. இந்த எண்காரர்கள் இறைபக்தியை அதிகரித்து கொள்வார்களேயானால் இவர்களுக்கு வருகின்றதுன்பங்கள் எல்லாம் தூள் தூளாகிவிடும்.

தற்பெருமை பேசிக்கொள்வதில் அதிக ஆர்வம் கொண்ட இவர்கள் ஒரு சிறிய காரியத்தைக் கூட பெரிதுப்படுத்திப் பார்த்து அதனால் வேதனைப்படும் தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள். இதனால் இவர்களின் உள்மனம் எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு ஏக்கத்திற்கு அல்லது சஞ்சலத்திற்கு உள்ளாகி தவித்துக் கொண்டிருக்கும்.

எவரையும் தங்கள் பேச்சுத்திறமையால் கவர்ந்து விடும் இவர்களிடம் தலைக்கனம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். இவர்களிடம் யாராவது பேசுவதற்கு மாட்டிக்கொண்டால் அவ்வளவுதான். அறுஅறு என்று அவர்களை அறுத்தெடுக்கும் அறுவை மன்னர்களாக இவர்கள் இருப்பார்கள்.

காதல் கல்யாணம் என்பது இவர்களுக்கு அபூர்வமாகத் தான் நடக்கும். பெரும்பாலும் இவர்களுக்கு காதலில் தோல்விதான் ஏற்படும். இந்த எண்களைக் கொண்ட கணவன்- மனைவியருக்கிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் இருந்து கொண்டே இருக்கும். இதனால் இவர்களின் மணவாழ்விலும் சிக்கல்கள் ஏற்பட அது வழி அமைத்து விடும். இவர்களுக்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால் ,

இந்த எண்காரர்கள் குறிப்பாக வாகனங்கள் ஓட்டும் போதோ பாதையில் நடந்து செல்லும் போதோ மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காரணம் விபத்துகள் இவர்களுக்கு விருந்து வைக்கக் காத்திருப்பதுதான்.


இந்த எண்காரர்களுக்கு பசு வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை வைத்து நடத்துதல், திரவமான மருந்து வகைகள், அழகு சாதனங்கள், தைலங்கள், வர்ணச் சாயங்கள் போன்றவற்றை விற்பனை செய்வதன் மூலம் இவர்கள் நிறையவே இலாபம் பெறலாம். இந்த எண்காரரிடம் நிறையவே ஆகாஷண சக்தி இருப்பதால் இவர்களிடம் பொருள் வாங்க வருகிறவர்கள் வெறுங்கையுடன் போகவே மாட்டார்கள்.

இவர்கள் இருண்ட நிறங்கள் எல்லாவற்றையும் குறிப்பாக கறுப்பு, கெட்டியான சிவப்பு நிறங்களைத் தவிர்த்து கொள்வது சிறப்பு. இந்த எண்காரர்களைப் பற்றி எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,

2 ஆம் எண்காரர்களுக்கு நீரிழி நோய், ஜீரணக் கோளாறுகள் போன்றவை ஏற்பட்டு, அதனால் விழிகளில் கோளாறு ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. இதற்குத் தலையாய காரணமாக அமைவது சோம்பலும், உடல் உழைப்பின்றியும் இருப்பது தான். தினமும் சுறுசுறுப்பாக இயங்கி வந்தால் இவற்றை எல்லாமே தவிர்த்துக் கொள்ளலாம்.

# மருத்துவ உதவி கோரிய 54 பேருக்கு நிதியுதவி

## வடமாகாண ஆளுநர் வழங்கினார்



(கொழும்பு)

இவ்வாண்டு மருத்துவ உதவி கோரிய 54 பேருக்கான நிதியுதவி நேற்று முன் தினம் ஆளுநர் செயலகத்தில் வைத்து வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் வழங்கப்பட்டது.

புற்றுநோய், இருதய நோய்கள், சிறுநீரக நோய்கள் போன்ற பல்வேறு தீவிர நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆளுநர் நிதியத்தில் இருந்து இவ் உதவிகளை பெற்றிருக்கின்றார்கள்.

இதன்பிரகாரம் உயிரைக் காக்கும் சத்திர சிகிச்சைகள் மற்றும் மருத்துவத்தேவைகள் ஆகியவற்றின் மொத்தச் செலவின் ஒரு பகுதியாக ஆகக்கூடியது 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தை மேலும் விஸ்தரித்து அதன் முழுமையான நோக்கத்தை அடைவதற்காக பல்வேறு கருத்திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளது. (2)

# மகாபொல புலமைப்பரிசில் பெறுவோரின் தொகையை அதிகரிக்கத்திட்டம்

உயர் கல்வி மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல புலமைப் பரிசில் எண்ணிக்கையை எதிர்வரும் வருடங்களில் 2 ஆயிரமாக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

மகாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் உதவி நிதியம் வழங்கும் புலமைப் பரிசில் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் 45 ஆயிரம் மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

அந்த தொகையை 47 ஆயிரமாக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களில் 50 சதவீதமானவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்டு வருகிறது. (2)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர். தம்பிப்பிள்ளை பாலசுந்தரம்

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. ஐங்கரன் அவர்களின் அன்புத் தந்தை அமரர். தம்பிப்பிள்ளை பாலசுந்தரம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கம்பர்மலை வித்தியாலயம்,
கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை.

அதிபர்,
ஆசிரியர்கள்.

(சி-6722)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆந்தைகளின் மொழி

அன்று காலை, அக்பரைப் பார்த்த உடனேயே அவர் அன்று என்ன செய்ய நினைக்கிறார் என்று பீர்பாலுக்குத் தெரிந்துவிட்டது.

குதிரைச்சவாரிக்கேற்ற உடையை அவர் அணிந்திருந்தார். வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் வேறு எங்கும் பார்க்காமல் ஆயுதங்களின் மீதே மிகவும் கவனமாக இருந்தார்.

அக்பர் அன்று வேட்டையாடத் திட்டமிட்டிருக்கிறார் என்று பீர்பால் புரிந்து கொண்டார். வேட்டையாடுவது அக்பருக்கு மிகவும் பிடித்த பொழுதுபோக்கு!

ஆனால் அவர் வேட்டையாடுவது பீர்பாலுக்குப் பிடிக்கவில்லை. அதை எப்படித் தடைசெய்வது என்பதைப் பற்றியே அவர் சிந்திப்பார்.

சற்று நேரங்கழித்துத் தன் கவனத்தை ஆயுதங்களிலிருந்து விடுத்து, பீர்பாலின் மீது செலுத்திய அக்பர் "நான் இன்று என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?" என்று பீர்பாலைப் பார்த்துக் கேட்டதும், "மற்றவர்களின் மனதிலுள்ளதை அறிந்து கொள்ளும் திறமை எனக்குக் கிடையாது" என்றார் பீர்பால்.

"பொய் சொல்லாதே, பீர்பால்! நான் என்ன செய்யப் போகிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே தெரியாததுபோல் நடிக்கிறாய். மிதமான குளிர்வீதம் இந்தக் காலைப் பொழுதில் வேட்டையர்டச் சென்றால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து! உன் கருத்து என்



னவோ?" என்றார். "தங்களின் கருந்தே என்னுடைய கருத்தும்!" என்றார் பீர்பால். "அப்படியானால், நீயும் என்னுடன் வேட்டையாட வர வேணடும்!" என்றார் ,அக்பர்.

"தங்கள் கட்டளைப்படி நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்று பணிவுடன் பீர்பால் பதிலளித்தார். "பீர்பால்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை. நாவில் உனக்கு இத்தனை வலிமையைக் கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்" என்றார். "ஆகட்டும் பிரபு!" என்றார் பீர்பால்.

சற்று நேரத்திற்குப்பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீர்பாலும் அக்பருடன் சென்றார். காட்டினுள் நுழைந்தபிறகு,



அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்த சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும், மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று, கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சல் அடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்தபோது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது. புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாகமுற்றுக் கையை உயர்த்திக் கூச்சலிட, சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வு எடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பாலுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள்



கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன. அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்ந்து இருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.

அவற்றின் ஒலியை வெகு நேரம் உன்னிப்பாகக் கவனித்த அக்பர், "இந்த ஆந்தைகளின் மொழி நமக்குப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றார்.

"பிரபு! அவற்றின் மொழி எனக்குத் தெரியும்!" என்றார் பீர்பால்.

'அப்படியா? பிறகு ஏன் சும்மா யிருக்கிறாய்? அவை என்ன பேசுகின்றன என்று உடனே சொல்!" என்றார் அக்பர். "பிரபு! அவையிரண்டில் ஒன்று மணப்பெண்ணின் தந்தை! மற்றொன்று பிள்ளையின் தந்தை! அவை வரதட்சிணையைப் பற்றி விவாதம் செய்துகொண்டு இருக்கின்றன. பிள்ளையின் தந்தை மிருகங்களே இல்லாத நாற்பது காடுகள் சீர்வரிசையாகத் தர வேணடும் எனக் கேட்கிறது. பெண்ணின் தந்தை தன்னால் இருபது காடுகள் மட்டுமே தரமுடியும் என்று சொல்கிறது." என்றார் பீர்பால்.

தொடர்ந்து, "பெண்ணின் தந்தையான அந்த ஆந்தை மேலும் தனக்கு ஆறு வாரகாலம் அவகாசம் தந்தால், மீதி இருபது காடுகளையும் ஏற்பாடு செய்ய முடியும் என்கிறது," என்றார். "இது என்ன உளறல்? மிருகங்களே இல்லாத காடுகள் அதற்கு எங்கிருந்து கிடைக்கும்? இருபது காடுகள் தருவதாக அது எப்படி ஒப்புக்கொண்டது?" என்றார் அக்பர்.

"அது உளறவில்லை! சரியாகத் தான் சொல்கிறது. நீங்கள் இருக்கும் தைரியத்தில்தான் அது அப்படிப் பேசுகிறது!" என்றார் பீர்பால். "சரிதான்! ஆந்தைதான் உளறுகிறது என்று நினைத்தால் நீயும் உளறுகிறாயே!" என்றார் அக்பர். "நான் உளறவில்லை, பிரபு! ஆந்தையும் உளறவில்லை! நீங்கள் ஒருமுறை வேட்டையாட வந்தாலே, காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தும் கொல்லப்பட்டு விடுகிறது.

அதுபோல் இதுவரை நீங்கள் இருபது காடுகளை மிருகங்களேயில்லாமல் செய்துவிட்டீர்கள். இன்னும் அடுத்த ஆறு வாரத்தில் நீங்கள் இருபது முறை வேட்டையாடினால், மீதியுள்ள இருபது காடுகளும் காலியாகிவிடும்! அந்த தைரியத்தில்தான் அந்த ஆந்தை அவ்வாறு கூறுகிறது!" என்றார் பீர்பால்.

பளீரென முகத்தில் அறைந்தது போல் இருந்த பீர்பாலின் விளக்கம் அக்பரை மௌனமாக்கி விட்டது. தன் செய்கைக்கு முதன்முதலாக வெட்கித் தலை குனிந்த அக்பர், "பீர்பால்! என் கண்களை நீ இன்று திறந்துவிட்டாய்! என்னுடைய மகிழ்ச்சிக்காக காட்டில் வாழும் மிருகங்களைக் கொன்று குவிப்பது ஈனமான செயல் என்று புரிந்து கொண்டேன். இன்றுமுதல் வேட்டையாடுவதை நிறுத்தி விடப் போகிறேன்" என்றார் அக்பர்.

பீர்பாலுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. இத்தனை எளிதாக அக்பரின் மனம் மாறும் என்று அவர் நினைக்கவில்லை. "பீர்பால்! என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் இப்போது சொன்னதைக் கேட்டு அந்த ஆந்தை என்ன சொல்கிறது என்று எனக்குச் சொல்!" என்றார் அக்பர்.

"சக்கரவர்த்தியின் மனம் மாறிவிட்டதால், இனி என்னால் மிருகங்கள் அற்ற காடுகளை வரதட்சிணையாக அளிக்க முடியாது என்று அது கூறுகிறது!" என்று பீர்பால் கூறவும், அக்பர் பலமாகச் சிரித்தார்.

ΩΩΩΩΩΩΩΩΩΩ

## 03.2014 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1610 -ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மாஸ்கோவைக் கைப்பற்றின.
- 1664 - நியூ ஜேர்சி பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.
- 1879 - ஆங்கிலேய படைகள்-சூலு போர்: நூற்றுக்கும் அதிகமான ஆங்கிலப் படைகள் சூலுக்களினால் சுற்றிவளைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.
- 1894 - முதற் தடவையாக கொக்கா-கோலா மென்பானம் கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1913 - ஆஸ்திரேலியாவின் வருங்கால தலைநகர் அதிகாரபூர்வமாக கான்பரா எனப் பெயரிடப்பட்டது. கான்பரா அமைக்கப்படும் வரையில்-1927 வரையில் மெல்பேர்ண் தற்காலிகத் தலைநகராக இருந்தது.
- 1918 - 215 ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைநகராக இருந்த சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகர் அந்தஸ்து மாற்றப்பட்டு மொஸ்கோ தலைநகராக்கப்பட்டது.
- 1930 - மகாத்மா காந்தி பிரித்தானிய ஆட்சியாளரின் உப்பு ஆதிக்கத்துக்கு எதிராக 200 மைல் நீள தண்டி யாத்திரையை ஆரம்பித்தார்.
- 1938 - ஜேர்மனியப் படைகள் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தன. அடுத்த நாள் இணைப்பு அறிவிக்கப்பட்டது.
- 1940 - குளிர் காலப் போர்: பின்லாந்து மொஸ்கோவுடன் அமைதி உடன்பாட்டிற்கு வந்தது. கரேலியாப் பகுதி முழுவதும் சோவியத் ஒன்றியம் பெற்றுக் கொண்டது. பின்லாந்துப் படைகளும் மீதமிருந்த மக்களும் உடனடியாக வெளியேறினர்.
- 1954 - சாகித்ய அகாதெமி இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- 1967 - சுகார்ட்டோ இந்தோனசியாவின் ஜனாதிபதியானார்.
- 1968 - மொரீசியஸ் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது
- 1992 - மொரீசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசானது.
- 2003 - செர்பியாவின் பிரதமர் சொரான் டின்டிச் கொல்லப்பட்டார்.
- 2006 - தென்னாபிரிக்கா ஒரு நாள் சர்வதேச துடுப்பாட்டமொன்றில் 438/9 ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலியாவை (434) வென்று சாதனை படைத்தது.
- 2007 - கலிபோர்னியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத்தீயினால் 2000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு எரிந்து நாசமடைந்தன.

### பிறப்புக்கள்

- 1925 - லியோ எசக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர்

### இறப்புக்கள்

- 1991 - ராக்னர் கிரனிற், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....மறுநாள் வழக்கம் போல சுந்தரானந்தர் சிவபூஜையைத் தொடங்கிய போது, புதிய சித்தர் நமக்குத் தெரிந்து நாம் கேட்கின்ற விடங்களுக்கு இவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் பார்ப்போம் என்று எண்ணியவராய் வேதாந்த விடயங்களைப் பேச ஆரம்பித்தார்.


சுந்தரானந்தரே! உலகத்தில் சித்த ஞான தவம் செய்தோர் யாவரும் தானே பிரம்மமென்பதை அறிந்தவர்களாதலால் தன்னையே பூசித்து ஆத்ம ஞானம் அடையலாம் என்கிறார்களே, நீங்களும் சித்தஞான தவத்தவர் தானே, நீங்கள் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது? முக்தியடைய சுலபமான வழியிருக்கும் பொழுது அவ்வழியைத் தவிர்த்து, இந்த லிங்கத்தை வைத்துப் பூஜை செய்கிறீர்களே, அவ்வளவு சிறப்புப் பொருந்திய லிங்கமா இது?

ஆம் சித்தரே! இது வெறும் லிங்கம் மட்டுமல்ல, சிவபெருமானின் திருவுருவமாகும். இதை சிவபெருமானின் திருவடிவமாகவே நாங்கள் எண்ணிப் பூசிப்பதற்கு இன்னொரு சிறப்பான காரணமும் இருக்கிறது.

அதென்ன காரணம்? என்று புதிய சித்தர் கேட்க, சுந்தரானந்தரும் அந்த லிங்கத்தின் பெருமைகளைக் கூறலானார்.

சுவாமி, இறைவனின் இயற்கைத் திருவடிவம்தான் இந்தச் சிவலிங்கம். அதனால்தான் அண்டம் எனப்படும் பரந்த இந்தப் பெரிய உலகம்கூட சிவலிங்கமாகக் கருதப்படுகிறது.

சக்தியை முதற் காரணமாகக் கொண்டு இறைவர் உலகினைப் படைத்தருளுகிறார். போகம், முக்தி, புத்தி, சித்தி, ஆகம நூல், முப்பத்தாறு தத்துவங்கள், அத்துவாக்கள் ஆகிய அனைத்தும் சிவனது ஆணையால் நிகழ்வனவே.



ஸ்ரீ சுந்தரமகாலிங்கர்

சிவலிங்கத்தின் அடிப்பகுதி பீடம் அல்லது ஆவுடை எனப்படும். அதன் நடுவில் நீண்டு விளங்கும் பிழம்புதான் லிங்கம். இம்முறையில் பார்த்தால் இவ்வுலகின் வானப் பெரு வடிவமே லிங்கமாகவும், பரந்து விரிந்த நிலப் பரப்பே ஆவுடை என்னும் பீடமாகவும் அமைந்துள்ளது.

இந்த உலகத்தின் நிலப்பகுதி ஆவுடையார்; ஆகாயப் பகுதி லிங்கம்; கடல் திருமஞ்சனச்சாலை, மேகம் கங்கை நீர், நட்சத்திரங்கள் ஆகாய லிங்கத்தின் மேல் விளங்கும் மாலை, எட்டுத்திக்குகள் திருஆடை இவைதான் அண்ட லிங்கத்தின் அடையாளங்கள்.

லிங்க வடிவில் அமைந்த லிங்கத்தைப் போலவே பிண்டமாகிய நமது உடலின் அமைப்பும் சிவலிங்கமாக அமைந்துள்ளது. மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம் என்று சித்தர்கள் மொழிவதும் இதன்பொருட்டே.

## ஆன்மீகம் 59

மானுட ராக்கை வடிவம் தான் சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவம் தான் சிதம்பரம்
மானுட ராக்கை வடிவம் தான் சதாசிவம்
மானுட ராக்கை வடிவம் தான் திருக்கூத்து

மானுட ராக்கை ஐம்பூதச் சேர்க்கையால் ஆனதால் இறந்தவர்கள் மீண்டும் வினைக்கீடாகப் பிறக்கிறார்கள். இறைவனை வணங்கினால் பிறப்பு அறும். உடலெடுத்த போதே பிரமன் முதலான மூர்த்திகள் யாவரும் உடலை வழியாகக் கொண்டே உள்ளிருந்து அருளுகின்றனர். இறைவன் அன்பை வாயிலாகக் கொண்டு உயிர்களைச் சிவமாக்கி ஆண்டருளுகின்றான்.


உலக நன்மைக்காகக் கருவறையின் மேல் கட்டப்படும் கோபுரம் தூல லிங்கம்; கருவறையில் இருக்கும் லிங்கம் சூக்கும லிங்கம். பலிபீடம் இடப லிங்கம். இதுவே கோயிலின் லிங்க அமைப்பு முறையாகும்.

அகாரமாகிய சிவனும் உகாரமாகிய சக்தியும் கூடுகையில் உலகின் பொருள்களெல்லாம் இயங்கும் என்பதை உணர்த்துவதே ஆத்ம லிங்கமாகும். (தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



71

....உள்ளங்கையை வைத்தால் புறங்கை நனையாது. கைவைத்துப் பார்க்கும்படி தான் தண்ணீர் இருக்கும். அதனால்தான் வைகை எனப் பெயர் என்று. வைகையின் இயற்கை அமைப்பில் ஒரு அற்புதம் உண்டு. அதற்கு சங்கமம் கிடையாது. வைகை ஓடும் மதுரை, அன்று இரண்டாவது முறையாக ஒரு விழா கண்டது. அதுதான் உலகத் தமிழ் மாநாடு.


பாரதத்தின் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஊர் மதுரை. இமயத்தில் இருக்கும் ஈசனே இறங்கி வந்து பெண் கொண்ட இடமும் அதுதான். அவனே முதல் தமிழ்ச் சங்கம் அமைத்து அதற்கு தலைமை பீடம் தாங்கிய இடமும் அதுவே. உலகத் தமிழ் மாநாட்டிற்காக அந்த மதுரையின் மண் தெரியாமல் மக்கள் கூட்டம். எள்ளைத் தூவினாலும் நிலத்தில் விழாத நெரிசல்.

அந்த விழாவின் முக்கிய சிறப்பு, அதற்கு அன்னை இந்திராகாந்தி விஜயம் செய்தது. அவர் பாரதப் பிரதமராக அவ் விழாவுக்கு வரவில்லை. தமிழன்னைக்குத் தோழி. தமிழர்களின் முக்கிய விருந்தாளியாக வந்திருந்தார். அன்னை அன்றுதான் முழுமனதுடன் மகிழ்வுடன் கூடிய கூட்டத்தை பார்த்தார். வலிய வரவழைக்கும் சிரிப்புக்கும், தெள்ளிய உள்ளத்தின் உவகைச் சிரிப்புக்கும் வித்தியாசம் பார்த்தார்.

மக்களது குதூகலத்தையும் அவர்களது வாழ்த்தொலியையும் கேட்ட பின், நீங்கள்தான் கடைசிவரை முதல்வர். இருந்தாலும் உங்களுக்குப் பின் யார் என்று தீர்மானித்திருக்கிறீர்களா? என்று கேட்டதும் ஆட்சி நம்ம நினைப்பில் இல்லை... மக்கள் தேர்ந்தெடுப்பில்தான் இருக்கிறது என்றார் செம்மல்.

பொதிகை

வைகை முதல் பொதிகை வரை என்று தமிழ் மண் எல்லையைச் சொல்லுவார்கள். குறுமுனி அகத்தியன் மக்களால் புடை சூழப்பட்டவன். அதனால்தான் மீனாட்சி கல்யாணத்தில் கூடிய மக்கள் வெள்ளத்தால் பாரதமே தென்பகுதியில் சாய்ந்தது மக்கள் கூட்டத்தைத் தளாமல். அதனால் அகத்தியனைப் பொய்கைக்குப் போகச் சொன்னார் பரமேஸ்வரன். அகத்தியன் அங்கு போனார். அவரது பக்தர்கள் பின் தொடர்ந்தார்கள். பாரதத்தின் தென் பகுதி அழுந்தாமல் நிமிர்ந்து நின்றதாக புராணம்.



அன்பின் உருவான அன்னை தெரேசாவுடன் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்

**கந்தபுராணம்**

கந்த புராண நிகழ்ச்சியைக் கண்ணால் கண்டவர் நம் பிரதமர். பாண்டிய நாட்டைத் திண்டாட வைத்த மக்கள் வெள்ளம் சோழ நாட்டிலும் புகுந்தது. பிரகதீஸ்வரும் பிரமித்தார். தஞ்சை பெரிய கோயில் தனது கும்பாபிஷேக விழா அன்று கண்ட கூட்டத்தைத் திரும்பவும் பார்த்தது. தன்னைக் கட்டியவன் சிலையாக வரப்போகும் வரலாற்றைக் காணத் திகைத்தது. ராஜராஜன் சிலையை உள்ளே வைக்கும் வைபவம் நடந்தது.

உலகக் கட்டட விற்பன்னர்களை மலைக்க வைக்கும் மகத்தான பொறியியல் நுட்பம் நிறைந்தது தஞ்சைப் பெரிய கோயில். அப்படி நுட்பமும் 1008 சாஸ்திரமும் அமைக்கப்பட்ட கோயிலுக்குள் ஒரு மன்னன் சிலையை வைத்தது தெய்வ கோபமாகி விட்டதோ என்னவோ, சிலையைத் திறந்ததும் தலை சுற்றி விழுந்தார் செம்மல்.

மதுரை மகாநாட்டிலும் சரியான தூக்கமில்லை. ராஜராஜன் சிலை திறப்பு வேலையிலும் விழித்திருந்தார். அந்த அசதியில் மயக்கமுற்றார் என்றே நினைத்தோம். அவசர அவசரமாக நிகழ்ச்சியை முடித்தார் செம்மல். அதிலும் முக்கிய பங்கேற்ற இந்திரா அன்னையை உரிய மரியாதையுடன் டெல்லிக்கு அனுப்பி விட்டு இவர் சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பியதும் தோட்டத்தில் வந்து படுத்துவிட்டார். பலர் வந்து பார்த்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்தமருத்துவத்தில் உடலின் செயற்பாடுகளுக்கும் ஆரோக்கியத்திற்கும் பிரக்கிருதிக்கும் (யாக்கையின் இலக்கணம்) இடையேயான தொடர்பு- நீங்கள் எந்த வகை?

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

ஒரு சிலருக்கு வாத, பித்த,கபம் இவற்றில் ஏதாவது ஒன்றின் தன்மை மட்டுமே அதிகமாகக் காணப்படும். இதனால் அவர்கள் ஒரு விதத்தில் தங்கள் உடற்கூறு பற்றி திட்டவட்டமாக அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளமுடியும். ஆனால் பலருக்கு இரண்டு தோஷங்கள். அதாவது வாத பித்தம், பித்த கபம், வாத கபம் என்று கலந்து காணப்படும். இவர்கள் இரட்டைத்தன்மை கொண்டவர்கள். சில சமயங்களில் பிரச்சினை இல்லை. ஆனால் நம்மில் பெரும்பாலானோர் இரட்டைப் பிரக்கிருதி உடையவர்களே இரட்டைப் பிரக்கிருதி கொண்டவர்களின் குணங்களைப் பார்த்தால்,

### வாத- பித்த பிரக்கிருதி

வாத- பித்த தன்மையுடையோர் வாத தோஷத்திற்கேற்ப உஷ்ணத்தை விரும்பினாலும் அவர்களுடைய பித்த குணம் அதை அடக்கிவிடும். பித்த குணம், நிறைய சாப்பிடுவதற்கு தூண்டினாலும் வாதகுணம் இருப்பதால் ஜீரணசக்தி நிலையற்றதாக இருக்கும். உடல் தோற்றம் வாத பித்த தன்மையை வெளிக்காட்டும். வாதத்தின் சுருளும் பித்தத்தின் நீளமும் கலந்த தலைமுடி. பயமும் கோபமும் மாறிமாறி வரும். ஆத்திரமும் அதிகாரமும் வெளிப்படும். பித்தகுணம் அதிகாரத்தை கிளப்பும் போது வாதகுணம் தன் சக்தியை பிரயோகித்து கபத்தை எழுப்பி விடும். எனவே பலவீனமே வெளிப்படும்.

ஆரோக்கியமானவாத-பித்தமனிதர்களுக்கு வாதத்தின் சுய சிந்தனைகளும் பித்தத்தின் செயற்படுத்தும்தன்மையும் இணைந்திருக்கும். வாதத்தின் எளிமையும் பித்தத்தின் வலிமையும் அவர்களின் பொதுக்குணங்க ளாக அமைந்திருக்கும். இனிப்புச்சுவை இவர்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

### பித்த- கப பிரக்கிருதி

பித்த- கப பிரக்கிருதி உடையவர்கள் எந்த நிலைமைக்கும் ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ளும் தன்மையுடையவர்கள். கபத்தின் உறுதியும் பித்தத்தின் இணைந்து செல்லும் தன்மையுந்தான் இதற்கு காரணம். எல்லா வகையிலும் வெற்றி காண்பவர்கள். பொதுவாக பித்த- கப பிரக்கிருதி உடையவர்களாகத்தான் இருப்பார்கள். பித்தத்தின் செயல் வேகமும் கபத்தின் வலிமையும் இதைக் கவனித்துக் கொள்கிறது. பித்தத்தின் கோபத்தை, கபத்தின் எச்சரிக்கை, உணர்வு அடக்கி விடுகிறது. கைப்பு, துவர்ப்பு சுவைகள் இவர்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

### வாத-கப பிரக்கிருதி

வாதமும் கபமும் குளிர்ச்சியோடு சம்பந்தப்பட்டன. என்வே வாத- கப பிரக்கிருதி கொண்டவர்கள் கபத்தின் ஆதரவால் தனி




வாத பிரக்கிருதிகாரர்களைப் போல் அதிக குளிரால் அவதிப்படமாட்டார்கள். சற்று உயரமாக சாதாரண உடற்கட்டுடன் காணப்படுவார்கள்.

அதிக உஷ்ணம் இல்லாததால் ஜீரணக் கோளாறுகள் ஏற்படலாம். வாத- கப பிரக்கிருதி உடையவர்கள் தங்கள் வேலையில் மிகவும் கவனமாக இருப்பார்கள். சற்று அதிகமாக என்று கூடச் சொல்லலாம். ஆனால் சிந்திக்காமல் முடிவுக்கு வருவார்கள். கபத்தின் உணர்ச்சியும் வாதத்தின் தீவிர உழைப்பும் சேர்ந்து அவர்களை உணர்ச்சி மிக்கவர்களாக ஆக்கிவிடும். சிறிய பாதிப்பும் மனதில் ஆழமான விளைவை ஏற்படுத்திவிடும். இவர்களுக்கு எப்போதும் உஷ்ணம் தேவைப்படும். எனவே, இனிப்பு, கைப்பு போன்றவற்றை விட உப்பு, கார்ப்பு போன்ற சுவைகளை அதிகம் பிடிக்கும்.

### சந்தி பாத பிரக்கிருதி

வாத, பித்த, கபம் மூன்றும் சேர்ந்து இருப்பது சந்திபாத பிரக்கிருதி. இவர்களிடத்தில் நோய் அண்டாது. நோய் வந்தால் சீக்கிரம் மாறவும் செய்யாது.

### உங்கள் பிரக்கிருதியை கண்டு பிடிக்க சுலபமான வழி

பிரக்கிருதியை ஆய்வு செய்வதன் மூலம் நோய்க் காரணங்களை சுலபமாக கண்டறியலாம். அதன்மூலம் அக்காரணிகளை ஒதுக்கி நோய் அண்டவிடாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். காயகற்ப சிகிச்சைமூலம் ஆரோக்கியத்தை அதிகரிக்கலாம்.

தன்னுடைய பிரக்கிருதி என்ன என்பதை அறிந்து கொண்டால் ஒருவன் தனது தினசரி வாழ்க்கை முறையையும் கால மாற்றத்தின் போதுள்ள முறைகளையும் அனுசரித்து அதற்குரிய அறிவுரைகளை கடைப்பிடித்து நோய் அண்டாமல் பார்த்துக்கொள்ளலாம். ஒருவரின் உடல் மற்றும் மனதின் சக்தி, திடசித்தம், உடம்பின் சகிப்புத்தன்மை, நோய் எதிர்ப்புத் திறன் ஆகியவற்றை அறிந்து கொள்ள பிரக்கிருதி உதவுகின்றது. ஒருவரது பிரக்கிருதியைத் தொடர்ந்து ஆராய்வதன் மூலம் அவரது உணவுமுறை, வாழ்க்கை முறை இவற்றை திருத்தி, மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.


திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.


உடலில் ஆரோக்கியத்தைக் காக்கவும் நோய்களைத் தவிர்க்கவும் பிரக்கிருதியைப் பற்றிய அறிவு உதவுகின்றது. பொதுவாக சித்த ஆயுர்வேத மருந்துகளில் நோய்களுக்கு சிகிச்சிக்கும் போது மருந்து, அனுபானம், பத்திய அபத்தியம் மூன்றும் முக்கியபங்கு வகிக்கின்றன.

சிகிச்சைக் கிரம அடிப்படையில் ஒரு நோய்க்கு மருந்து கொடுக்கும் போது வழங்கப்படும் அனுபானமும் கூறப்படும் பத்திய அபத்திய முறைகளும் அவர்களின் பிரக்கிருதியை அடிப்படையாக வைத்தே வழங்கப்படுகின்றது. எனவேதான், குறி குணங்களுக்கு மட்டுமன்றி நோயின் அடிப்படைக் காரணங்களையும் நீக்கக் கூடியதாக இருக்கின்றது என்றுகூடக்கூறலாம். *(முற்றும்)*

## பொதுநலவாய அமைப்பின் கொள்கைகளை இலங்கை அரசு மதித்துச் செயற்படவில்லை

## சாடுகிறார் ஸ்டீவன் ஹார்பர்

**இலங்கை அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகளை மதித்துச் செயற்படவில்லை என கனேடிய பிரதமர் ஸ்டீவன் ஹார்பர் தெரிவித்துள்ளார்.**

பொதுநலவாய நாடுகள் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இலங்கை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது இலங்கைக்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது.

அமைப்பின் தலைமைப் பதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வகித்து வருகின்றார். மனித உரிமைகளையும், சட்டம் ஒழுங்கையும் இலங்கை அரசாங்கம் மதித்து செயற்பட வேண்டுமென கனேடிய பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகளை அனைத்து உறுப்பு நாடுகளும் மதித்து செயற்பட வேண்டியது இன்றியமையாதது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மனிதவுரிமை பேணல், மதச் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல், ஒடுக்குமுறைகளை ஒழித்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய கொள்கைகள், கோட்பாடுகள் மதிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது அமைப்பின் தலைமைப் பதவியை வகித்து வரும் இலங்கை பொது நலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கவில்லை என அவர் குற்றம் சுமததியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடு என்ற ரீதியில் கனடா, நல்லாட்சி, சட்டம் ஒழுங்கு போன்ற பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை வலியுறுத்தி வருவதாக பிரதமர் ஹார்பர் தெரிவித்துள்ளார். (2)

## சனல்4 இன் புதிய ஆவணப்படம் பற்றி தெரியாது

### ஐ.நா. அமைப்பு தெரிவிப்பு

பிரித்தானியாவின் சனல்4 ஊடகத்தின் புதிய ஆவணப்படம் பற்றி தெரியாது என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சனல்4 ஊடகம் புதிய ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இராணுவப்படையினர், உயிரிழந்த பெண் போராளிகளின் சடலங்களை பாலியல் ரீதியாக துஷபிரயோகம் செய்வது தொடர்பான காட்சிகள் இந்த ஆவணப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணப்படத்தை பார்க்கவில்லை எனவும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் பான் பான் கீ மூனின் முன்னாள் பேச்சாளர் மார்டின் நெஷர்கீ இலங்கை விவகாரம் குறித்து அதிகளவில் பேசியிருப்பதாகவும் புதிய பேச்சாளர் ஸ்டிபன் டுஜாரீக் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு பேருந்துகள் மோதி விபத்து; 14 பேர் காயம்!

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் இரண்டு தனியார் பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6.50 மணியளவில் செரமின் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து காரணமாக கடுமையான போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2)

# நவிப்பிள்ளையின் அறிக்கை ஒருதலைப்பட்சமானது; அரசாங்கம் முற்றாக நிராகரிக்கிறது

## ஐ.ம.சு.முன்னணித் தலைவர்கள் தெரிவிப்பு

**(கொழும்பு) ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கை முழுக்க முழுக்க ஒருதலைப்பட்சமானது. இலங்கை அரசாங்கம் அதனை முற்றாக நிராகரிக்கிறது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் தெரிவித்தனர்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகம் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அமைச்சர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் காமினி லொக்குகே ஆகியோர் நேற்று முன்தினம் ஸ்ரீல. சு. க. தலைமை அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர்.

இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நவநீதம்பிள்ளை சொல்வது இதுதான் முதற்தடவையும் அல்ல. நவநீதம்பிள்ளை இலங்கை வந்தபோது யாழ்ப்பாணம் சென்றார்.

அங்கு அவரை சந்திக்க எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எழுத்துமூலம் அனுமதி கேட்ட போதும் அவர் சந்தர்ப்பம் வழங்காமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கினார்.

அப்போதே எமக்குத் தெரியும் அவரது அறிக்கை எவ்வாறு அமையப்போகிறதென்று. அது ஒரு தலைப்பட்சமாகவே அமையும்.

அவரது அறிக்கையில் 11 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இறுதியாக போரினால் உயிரிழந்தவர்களை நினைவுகூர அனுமதி வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது அவர் இலங்கை வந்த போது முள்ளிவாய்க்காலில் பிரபாகரனுக்காக மலர்வளைய மொன்றை வைக்க முயற்சித்தார்.

அவரால் அன்று இயலாமல் போனதை செய்ய முயன்றுள்ளார். மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையைப் பற்றி ஒன்றும் தெரியாமலேயே இவர்கள் பிரேரணைகள் கொண்டு வருகிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டுகளிலேயே கொண்டுவரப்பட்டது. அது 82 மற்றும் 89ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது.

ஐ.தே.கவினரே இந்தச் சட்டத்தை கொண்டு வந்தனர். இதை நீக்குவதாயின் எழுந்தமானத்தில் செய்துவிட முடியாது. பாராளுமன்றத்தினூடாகவே செய்யவேண்டும்.


இறுதி யுத்தத்தில் 40ஆயிரம் பேர் இறந்ததாக கூறுகிறார்கள். இதற்கு சாத்தியமே இல்லை.

சுனாமி போன்ற ஒரு பேரழிவின் மூலம் இவ்வாறான ஒரு தொகை இறந்திருக்கலாம்.

ஆனால், அப்பட்டமான முறையில் இவ்வாறான தொகையினர் இறந்துவிட்டனர் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

88, 89, 90ஆம் ஆண்டுகளில் தெற்கில் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். டயர்களில் எரிக்கப்பட்டார்கள். இது தொடர்பாக ஏன் விசாரணைகள் செய்யப்படவில்லை.

புலிகளினால் செய்யப்பட்ட படுகொலைகள், மனிதவுரிமை மீறல்கள் பற்றி ஏன் பேசவில்லை என்றும் அவர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர். (2)








கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் கல்லூரி அதிபர் எம். கனகலிங்கம் உரையாற்றுவதையும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, திருமதி சித்திரா குருகுலராஜா உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தும்பளை செய்தியாளர்)

## பொதுநலவாய நாடுகள் நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை

(கொழும்பு)

லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தின நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த நிகழ்வுகளில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை.

மாறாக, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஜனாதிபதியை பிரதிநிதித்துவம் செய்து லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை மாநாடு நடைபெற்றுவரும் நிலையில் லண்டனுக்கு விஜயம் செய்தால், சிக்கல்களை எதிர்நோக்க நேரிடலாம் என்ற காரணத்தினால் ஜனாதிபதி ஆரம்ப நிகழ்வுகளை தவிர்த்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (2)

## தேசிய ஔடதக் கொள்கை சட்டத்தின் இறுதி வரைபு ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

தேசிய ஔடதக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குரிய சட்டத்தின் இறுதி வரைபு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரிமாளிகையில் வைத்து நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

பேராசிரியர் சேனக பிபிலே தயாரித்த மருந்துப் பொருள் கொள்கையே தேசிய மருந்துப் பொருள் கொள்கையாக அறிவிக்கப்படவிருக்கின்றது.

கடந்த 40 வருடங்களாக இந்த மருந்துப் பொருள் கொள்கை பேசுபொருளாகவே இருந்தது.

என்றாலும் அக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மஹிந்த சிந்தனைக் கொள்கைப் பிரகடனத்தில் அறிவித்துள்ளார்.

அந்த உறுதிமொழிக்கு ஏற்ப அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துப் பொருள் கொள்கையுடன் தொடர்பான இச்சட்ட வரைபை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து அதனைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியதுடன் தேசிய மருந்துப் பொருள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சுயாதீன நிறுவனமாக ஸ்தாபிக்கப்படும்.

இதனூடாக மருந்துப் பொருள் கம்பனிகளின் பதிவை ஒழுங்கமைத்தல், குணவியல்புடன் கூடிய உயர் தரம் மிக்க மருந்துப் பொருள் பாவனை என்பன எதிர்பார்க்கப்படுகின்றது.

இம் மருந்துப் பொருள் கொள்கை நடைமுறைக்கு வந்ததும் இந்நாட்டின் மருந்துப் பொருள் துறையில் இடம்பெறுகின்ற ஊழல், மோசடிகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (2)

## அபிவிருத்தி திட்டங்களுக்கும் தேர்தலுக்கும் தொடர்புகள் இல்லை

### அமை. சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை தொலைநோக்கு திட்டத்துக்கு அமைய நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கும் தேர்தலுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகம் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தென் மாகாண சபைத் தேர்தலும் மேல் மாகாண சபைத் தேர்தலும் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதி வேக நெடுஞ்சாலைகள் திறந்து வைக்கப்படுகின்றன. இவை தேர்தலை இலக்காகக் கொண்டுதான் திறந்து வைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் சுமத்துகின்றன. இது தொடர்பாக அரசு என்ன கூறுகிறது என செய்தியாளர் ஒருவர் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் 2010 ஆம் ஆண்டிலிருந்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான பாரிய பணியை அரசாங்கம் ஆரம்பித்தது.

அபிவிருத்திக்கென அரசாங்கம் ஒரு கால அட்டவணையின் படி செயற்படுகிறது. காலத்துக்குக் காலம் அபிவிருத்தித்திட்டப் பணிகளை பூர்த்தி செய்வதும் அவற்றை மக்களிடம் கையளிப்பதையும் தாமதப்படுத்தாமல் செய்து வருகிறது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஒன்றை இலக்கு வைத்துக் கொண்டு அரசு அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்கவில்லை. அப்படியானால் மேல் மாகாண சபைத் தேர்தல் வருகிறது என்பதற்காக கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை தாமதித்து திறந்திருக்கலாம்.

நாம் அப்படி செய்யவில்லை. வேலைகள் பூர்த்தியடைந்ததும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிற்கு முன்னதாக திறக்க வேண்டும் என்ற இலக்கு வைத்து திறந்து விட்டோம். தேர்தலுக்கும் இதற்கும் தொடர்பில்லை.

நாம் அதிவேக நெடுஞ்சாலையை திறந்து விடவில்லை என்பதற்காக எவரும் எங்களுக்கு வாக்களிக்காமல் விடப்போவதுமில்லை. திறந்து விட்டோம் என்பதற்காக எவரும் எங்களுக்கு வாக்களிக்காமலும் விடப்போவதுமில்லை.

கட்சியின் சின்னம் கூட காட்சிக்கு வைக்கவில்லை. வேட்பாளர்களின எண்களும் இங்கு காட்சிக்கு வைக்கவில்லை. இவை தேர்தல் நிகழ்வுகள் அல்ல. தேசிய நிகழ்வுகள் மட்டுமே என்றும் அமைச்சர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக் கொலையாளிகளை மறைத்தார்கள்!

-பழ.நெடுமாறன்-

1991 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அன்று திருப்பெரும்புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். யார் படுகொலை செய்யப்பட்டாலும் வருந்தத்தக்கதேயாகும். அதிலும் இந்திரா காந்தியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் படுகொலை செய்யப்பட்டது எல்லோருக்கும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் கொடுத்தது.

ஆனால், ராஜீவ் காந்தியின் படுகொலையில் தொடர்புள்ள உண்மையான குற்றவாளிகளையும் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்களையும் கண்டறிந்து குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதற்குப் பதில் இந்த வழக்கு புலனாய்வில் நீதி, நேர்மை, உண்மை ஆகியவை முற்றிலுமாக மறைக்கப்பட்டன. புலன் விசாரணையில் தொடங்கி வழக்கு நடத்தப்பட்ட விதம், தடாநீதிமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்ட விதம் ஆகியவற்றில் பல உண்மைகள் ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன.

தேசத் தந்தை காந்தியடிகளின் கொலை வழக்கு விசாரணையும் பிரதமராக இருந்த இந்திரா காந்தியின் கொலை வழக்கு விசாரணையும் பகிரங்கமாக நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் சாட்சிகள் என்ன கூறினார்கள், குறுக்கு விசாரணையில் என்னென்ன கேள்விகள் கேட்கப்பட்டன என்பது போன்ற சகல விபரங்களும் அன்றாடம் பத்திரிகைகளின் மூலம் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. ஆனால், ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு விசாரணை இரகசியமாக நடத்தப்பட்டது. காந்தியடிகள் மற்றும் இந்திரா காந்தியின் கொலை வழக்குகள் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆனால், ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு கொடிய தடா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இதனால் எல்லாமே இரகசியமாகவும் மூடு மந்திரமாகவும் நடத்தப்பட வழிவகுக்கப்பட்டது.

இந்த வழக்கில் தமிழ்நாட்டுத் தமிழர்கள் 13 பேர், ஈழத்தமிழர்கள் 13 பேர் சரி சமமான எண்ணிக்கையில் மொத்தம் 26 தமிழர்கள் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டது ஏதோ தற்செயலல்ல. ஆழமான உள் நோக்கத்துடன் செய்யப்பட்டது. தமிழீழத்தில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்தின் தாக்கம், தமிழகத்தில் பரவவிடாமல் தடுக்கவும் தமிழ்த்தேசிய உணர்வை சிதைப்பதற்காகவும் திட்டமிட்டு இவ்வாறு செய்யப்பட்டது.

ராஜீவ் படுகொலை நடைபெற்ற மூன்று நாட்களில் விடுதலைப் புலிகளின் பன்னாட்டுச் செயலகத்தின் பொறுப்பாளராக லண்டனில் இருந்த தளபதி கிட்டு 24.5.1991 அன்று விடுதலைப்புலிகளுக்கும் இந்தக் கொலைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று மறுத்தார். அது மட்டுமல்ல, உண்மையில் இந்தக் கொலையில் ஈடுபட்டவர்களை கண்டு பிடிக்க புலன்விசாரணைக்குழுவிற்குத் தாங்கள் உதவத் தயார் என்றும் பகிரங்கமாகக் கூறினார். ஆனால் அவரைச் சந்தித்து விசாரிக்க புலன் விசாரணைக்குழு முன்வரவில்லை.

பாலஸ்தீன இயக்கத்தின் தலைவர் யாஷர் அராபத் ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து வரக் கூடும் என எச்சரிக்கை செய்திருந்தார். எத்தகைய அடிப்படையில் இவ்வாறு எச்சரிக்கை செய்தீர்கள் என அவரிடம் புலன் விசாரணைக்குழு விசாரிக்கவே இல்லை. 26 பேர்களில் ஒருவரான பெங்களூரைச் சேர்ந்த ரெங்கநாத் என்பவர் சிவராசனுடன் தான் டெல்லிக்கு சந்திராசாமி வீட்டுக்கு இருமுறை சென்றதாகக் கூறியிருந்தார். அது குறித்து சந்திராசாமியிடம் எதுவும் விசாரிக்கவில்லை.

ராஜீவ் கொலை நடந்த நேரத்தில் சுப்பிரமணியசுவாமியின் நடமாட்டம் மர்மமாகவே இருந்ததாக அவருடனே இருந்த திருச்சி வேலுச்சாமி பகிரங்கமாக குற்றம் சாட்டியபோதும் சுப்பிரமணியசுவாமியை புலனாய்வு விசாரிக்கவே இல்லை.

விடுதலைப் புலிகளுடன் பிறேமதாச நடத்திய பேச்சுவார்த்தை முறிந்து விட்ட காலகட்டத்தில் தமிழீழத்தின் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியைச் சந்திக்க அனுமதி கேட்டபோது அவரும் உடனடியாக ஒப்புக்கொண்டு 5.3.1991 இல் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் விடயத்தில் தான் தவறு செய்து விட்டதாக ராஜீவ் காந்தி கூறினார். அது மட்டுமல்லாமல் தான் மீண்டும் பதவிக்கு வந்த பிறகு விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் அது வரை போராட்டத்தைத் தாக்குப் பிடித்து நடத்திவருமாறும் ராஜீவ் கூறினார். இந்த விவரம் அனைத்தும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனுக்கு தெரிவிக்கப்பட்டது. அவரும் அதைக் கேட்டு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.


அதைப்போல அதே ஆண்டு ஏப்ரல் மாதத்தில் லண்டனைச் சேர்ந்த ஈழத்தமிழரான அர்ச்சனா சிற்றம்பலம் என்பவர் ராஜீவ் காந்தியை சந்தித்துப்பேசினார். அவரிடமும் ராஜீவ் காந்தி மனம் விட்டுப்பேசினார். கவிஞர் காசி ஆனந்தனிடம் கூறிய செய்திகளையே இவரிடம் ராஜீவ் காந்தி கூறினார். இச்செய்திகளைக் கேட்டு இலங்கை ஜனாதிபதியாக இருந்த பிறேமதாச அதிர்ச்சியடைந்தார். ஏற்கனவே ராஜீவ் மீது கடும் வெறுப்புக் கொண்டிருந்த அவர், விடுதலைப் புலிகளுடன் ராஜீவ் சமரசமாகப் போகக் கூடிய சூழ்நிலையைக் கண்டு திடுக்கிட்டார். ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமராகி விடுதலைப் புலிகளுக்கு உதவுவதன் மூலம் தனக்குப் பெரும் நெருக்கடி ஏற்படலாம் என அஞ்சினார்.

இலங்கை அரசியலில் தனது அரசியல் எதிரிகளை தீர்த்துக்கட்டியவர் பிறேமதாச என்பதை மறந்து விடக்கூடாது. பிறேமதாச அமைச்சரவையில் முக்கிய பொறுப்பு வகித்த அதுலத் முதலி அமைச்சர் பதவியில் இருந்து விலகி பிறேமதாசவுக்கு எதிராக செயற்பாட்டார். 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலை குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட குழு அளித்த அறிக்கையில் அதுலத் முதலியைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தவர் பிறேமதாச என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

குடியரசுத் தலைவராக இருந்த சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரணதுங்க கொலைக்கும் பின்னணியில் பிறேமதாச இருந்தார் என்பது பிற்காலத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதைப் போலவே பிறேமதாசவை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட காமினி திசநாயக்க என்னும் தலைவரும் படுகொலை செய்யப்பட்டார். இவரின் கொலையைப் பற்றி விசாரித்த கமிசன் இந்தக் கொலையிலும் பிறேமதாசவுக்குத் தொடர்பு இருந்தது எனக் கூறியது.

எனவே ராஜீவின் கொலையிலும் பிறேமதாசவின் கை வண்ணம் இருக்குமோ என்ற கேள்வி நியாயமற்றது என்று கூறிவிடமுடியாது. இந்தக் கோணத்தில் புலன் விசாரணை நடைபெறவே இல்லை.



**வர்மா கமிசன் குற்றச்சாட்டு**

ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா என்பதை ஆராய்வதற்கு நீதிபதி ஜே.எஸ். வர்மாவின் தலைமையில் ஒரு கமிசன் அமைக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நீதிபதி தனது அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தார். எதிர்க்கட்சியினரின் வற்புறுத்தலுக்குப் பிறகே 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை உள்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி. சவான் ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பிரதமர் நரசிம்மராவுக்கு ஏற்பட்டது. ஆனாலும் இரண்டாண்டு காலமாக இந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. பிறகு மத்திய அமைச்சர் ஐவரைக் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டு இந்த அறிக்கையைப் பரிசீலித்து அரசாங்கத்திற்குக்கூற வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த குழு பரிந்துரை செய்தது. எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 1996 ஆம் ஆண்டு இந்த அதிகாரிகள் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு அவர்களிடம் விளக்கம் கேட்கும் குறிப்புகள் அனுப்பப்பட்டன. யார் யார் அந்த அதிகாரிகள் என்று பார்த்தால் காங்கிரஸ் கட்சிக்கு மிக நெருக்கமானவர்கள் என்று புலப்படும். அமைச்சரவைச் செயலாளராக இருந்த வினோத் பாண்டே உளவுத்துறை தலைவர் எம்.கே. நாராயணன், உள்துறைச் செயலாளர் சிரோண்மணி சர்மா, பாதுகாப்புத் துறை செயலாளர் ஜி.எஸ்.வாஜ்பாய் ஆகியோரே இந்த முக்கியமான அதிகாரிகள் ஆவார்கள். ஓய்வுபெற்ற பிறகு இவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகும். இந்த நான்கு பேரும் மத்திய நிர்வாக மன்றத்திற்கு மேன்முறையீடு செய்தனர். ஓய்வுபெற்ற அதிகாரிகளிடம் விளக்கம் கேட்பது முறையற்றது என்று அது ஆணை பிறப்பித்தது. மேற்கண்ட அதிகாரிகள் திட்டமிட்டுப் பாதுகாக்கப்பட்டனர்.

இந்த அதிகாரிகளில் ஒருவரான எம்.கே. நாராயணன் பிற்காலத்தில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது அவருக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டவர் என்பது முக்கியமானதாகும்.

**நரசிம்மராவ்**

பிரதமராக நரசிம்மராவ் இருந்த போது அவர் அலுவலகத்தில் இருந்த முக்கிய கோப்புகள் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டதை புதுடெல்லியில் இருந்து வெளிவரும் அவுட்லுக் வார ஏடு தகுந்த ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. இதற்கு அரசாங்கத் தரப்பிலோ அல்லது உளவுத் துறைத் தரப்பிலோ எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை.

ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக குமார் என்னும் சி.பி.ஐ. அதிகாரி வெளிநாடுகளுக்குச் சென்றார். லண்டன் வழியாக இந்தியாவுக்குத் திரும்பும்போது லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் இந்த வழக்குகள் தொடர்பான கோப்புகள் அடங்கிய அவரது கைப்பெட்டி காணாமற்போய்விட்டது. முக்கிய கோப்புகளைத் தொலைத்த அந்த அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? காணாமற்போன கோப்புகளைத் திரும்பப்பெற மேற்கொண்டும் முயற்சிகள் எடுக்கவில்லையே ஏன்? இந்த கேள்விகளுக்கு இதுவரை பதில் இல்லை.

**கொலை வழக்கு விசாரணை**

ராஜீவ் கொலை வழக்கு நேர்மையுடனும் நீதிமுறையுடனும் நடத்தப்படவில்லை. சர்வதேச நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை.

சுமார் 5 ஆண்டுகள் வரை தடா நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டது. முதல் 4 ஆண்டுகள் வரை நீதிபதியாக சித்தீக் என்பவர் பதவி வகித்தார். பிறகு அவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுச் சென்றார். அதற்குப் பிறகு நீதிபதியாக நவநீதன் என்பவர் பொறுப்பேற்றார். 4 ஆண்டு காலம் நடைபெற்ற வழக்கில் 288 பேர் சாட்சியம் அளித்தனர். பல்லாயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட ஆவணங்களும் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்டன. இவை அத்தனையையும் ஓராண்டு காலத்திற்குள் படித்து உண்மை என்ன என்பதை உணர்ந்து தீர்ப்பளிப்பது என்பது யாராலும் முடியாத ஒன்று. ஆனால், நீதிபதி நவநீதன் அதை சாதித்தார். 26 பேருக்கும் தூக்குத் தண்டனையை விதித்தார். அவருக்குச் சொல்லப்பட்டதை அவர் செய்தார் என்பதுதான் இதிலிருந்து அம்பலமாகிறது.

தடா நீதிமன்றம் 26 தமிழர்களுக்கும் தூக்குத் தண்டனையை விதித்தது. ஆனால், உச்ச நீதிமன்றம் 19 பேரை முழுமையாக விடுதலை செய்தும் 3 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாககுறைத்தும் தீர்ப்பளித்தது. அப்படியானால் தடா நீதிமன்றம் அளித்த தீர்ப்பு நீதியின்பால்பட்டதே அல்ல என்பது நிரூபணமாயிற்று. கீழ் நீதிமன்றத்தில் 26 தமிழர்களுக்கு எதிராக அளிக்கப்பட்ட சாட்சியங்களில் எந்த மாறுதலுமில்லை. புதிய சாட்சியங்கள் உச்ச நீதிமன்றத்தில் கூறப்படவில்லை. அப்படியானால் மேற்கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் தடா நீதிமன்றம் ஒரு தீர்ப்பையும் உச்சநீதிமன்றம் வேறு ஒருவகையான தீர்ப்பையும் அளித்திருப்பது என்பது ஒரு உண்மையை தெளிவாக்கியுள்ளது. மனிதர்களின் தீர்ப்புகளுக்கிடையே பெருமளவு வேறுபாடுகளும், குறைபாடுகளும் உண்டு என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கு தடா சட்டத்தின் கீழ் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், அதே தடா சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் மட்டும் எப்படி செல்லுபடியாகும்? அந்த வாக்குமூலங்களின் அடிப்படையில் நால்வருக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது எந்த வகையில் நியாயமானதாகும். ஒப்புதல் வாக்குமூலங்கள் எப்படிப் பெறப்படுகின்றன என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். மூன்றாந்தர முறைகளைக் கையாண்டு பெற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில்தண்டனையை உறுதி செய்தது நீதியானதல்ல.

உண்மைக் கொலையாளிகளை மறைப்பதற்குத் துணைபோன காங்கிரசுக்காரர்கள் இப்போது நிரபராதிகள் விடுதலை செய்யப்படுவது கண்டு கூப்பாடு போடுவது கண்டிக்கத்தக்கதாகும். இவ்வளவு காலமும் உண்மையைத் திரையிட்டு மறைத்தவர்கள் இப்போதும் மறைக்க முயலுவதை மக்கள் அனுமதிக்கக்கூடாது. அவர்களின் முகத்திரையைக் கிழித்தெறிய முன்வர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் பிரேரணை தொடர்பில் மேற்குலக நாடுகளின் வாதம் பலமடைகிறது

(கொழும்பு)

**இலங்கை தொடர்பில் மேற்குலக நாடுகளின் வாதங்கள் பலமடைகிறது. அமெரிக்காவின் அறிக்கை தொடர்பில் கனடா, ஐரோப்பிய நாடுகளின் அழுத்தம் அதிகரிக்கிறது என பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதி ராஜ்குமார் மற்றும் நிக்சன் ஆகியோர் தெரிவிதுள்ளனர்.**

இலங்கை தொடர்பில் ஐ.நாடுகள் சபையின் அறிக்கைகளில் பாரிய நெருக்கடி, வெல்வதில் மாற்றமில்லை என பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதி ராஜ்குமார் மற்றும் சனல் 4 இன் ஆதாரம் தொடர்பிலும் இன்னும் பல ஆதாரங்கள் எம்மிடம் உண்டு என பிரித்தானிய தமிழர் பேரவையின் வெளிவிவகாரங்களுக்கான இணைப்பாளர் நிக்சன் ஆகியவர்கள் ஐ.நாவில் உள்ள லங்கா சிறி வானொலியின் விசேட கலையகத்தில் வழங்கிய செவ்வியிலேயே தெரிவித்தனர்.



இலங்கை தொடர்பான விசாரணைக்கான பொறுப்பை ஐ.நாவின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையிடம் ஒப்படைக்கும் போது, எந்தவிதமான பொறிமுறையை உருவாக்க முடியும் என்பது தொடர்பில் ஜெனீவா மனித வுரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அதிகார பூர்வமற்ற விவாதங்களில் ஆராயப்பட்டன.

உறுப்பு நாடுகளுக்கிடையில் கடந்த வெள்ளியன்று நடந்த அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக இந்த விவாதங்கள் நடந்துள்ளன.

இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ள பாகிஸ்தான், சீனா, கியூபா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இலங்கை மீது விசாரணை நடத்துவதற்கு ஐநா மனிதவுரிமைகள் ஆணையருக்கு அதிகாரங்கள் இல்லை. அதற்கான நிதிவளம் ஆணையத்திடம் இல்லை என்றும் வாதிட்டுள்ளன.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்துகின்ற நிலையில், அந்த விதமான ஏற்பாடுகள் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் வாதிட்டுள்ளன.

கால நீடிப்பு வழங்கினால் இருக்கும் ஆதாரங்களும் அழிந்து விடும் என கலந்து கொண்ட மனித வுரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இலங்கையில் இருந்து வருகை தந்திருக்கக் கூடிய மனிதவுரிமை ஆர்வலர் நிமல்கா பெர்னாண்டோ மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# தூக்கு மேடையை பார்த்த அச்சத்தில் பதவியை இராஜினாமா செய்த அலுகோசு

தூக்கு மேடையை பார்த்த அதிர்சசியில் அலுகோசு பதவிக்காக புதிதாக நியமிக்கப்பட்டவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தூக்கு தண்டனை நிறைவேற்றுவதற்காக குறித்த நபர் புதிதாக நியமிக்கப்பட்டிருந்தார்.

ஒரு தசாப்தத்திற்கும் அதிகமாக அலுகோசு பதவி வெற்றிடமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அலுகோசு பதவிக்காக அண்மையில் நியமிக்கப்பட்ட இருவர், அறிவிக்காமலேயே கடமையிலிருந்து விலகிக் கொண்டிருந்தனர்.

அதன் பின்னர் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒருவர் அலுகோசுவாக நியமிக்கப்பட்டார்.

எனினும், இவரது பதவிக் காலம் நீடிக்கவில்லை.இந் நிலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் அமைந்துள்ள தூக்கு மேடையை பார்த்து அதிர்ச்சியடைந்த குறித்த நபர் தனது பதவியை இராஜினாமா செய்வதாக சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை, ஏற்கனவே அலுகோசு பதவிக்காக நியமிக்கப்பட்ட ஒருவர் மீளவும் கடமைகளை பொறுப்பேற்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கயில் மரண தண்டனை விதிக்கப்பட்ட போதிலும் 1970 ஆம் ஆண்டுகளின் பின்னர் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் பொட்டநவுபர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மரண தண்ட னை கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# புனே விமான நிலையத்தில் இரு இலங்கையர்கள் கைது

இந்தியாவின் புனே விமான தளத்தில் வைத்து இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் போலியான இந்திய கடவுச்சீட்டுக்களை கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.டுபாய் நோக்கி செல்வதற்காக சென்னையில் இருந்து புனே விமான நிலையத்தை சென்றடைந்தபோதே இவர்களது கைது இடம்பெற்றுள்ளது.இந்த இருவரும் சென்னையில் பல காலமாக வாழ்ந்து வருகின்றனர்.இவர்கள் இருவரும் வெவ்வேறு பெயர்களில் கடவுச்சீட்டுக்களை கொண்டிருந்தனர் என்று புனே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2)

# சிங்கள மக்கள் குறித்து சர்வதேசம் பேசுவதில்லை

## ஜாதிக ஹெல உறுமய கவலை



(கொழும்பு)

சிங்கள மக்கள் பற்றி சர்வதேசம் பேசுவதில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சி வருத்தம் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்ட அப்பாவி சிங்கள மக்கள் தொடர்பிலோ, புலிகளின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலோ சர்வதேச சமூகம் கேள்வி எழுப்புவதில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும், பயங்கரவாத எதிர் தேசிய அமைப்பின் தலைவருமான நிசாந்த சிறி வர்ணிசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த சிங்கள மக்களின் மனிதவுரிமை மீறல்களுக்காக சர்வதேச சமூகத்தின் எந்த தரப்பும் கவலைப்பட்டதில்லை.

பயங்கரவாதத்திற்கு எதிராக மீண்டும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்த நேரிட்டுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் இலங்கைக்குள் வருகைதர அஞ்சிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இன்று சுதந்திரமாக வந்து நாட்டுக்கு எதிராக அறிக்கைகளை தயாரிக்கின்றனர்.

புலிகளின் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் உரிய கணக்கெடுப்பு கூட நடத்தப்படவில்லை.

நாடு பற்றி கவலைகொள்ளாத சில கடும்போக்குடைய சக்திகள், தேச விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# போதைப் பொருள் கடத்தியவர்களை கைதுசெய்ய இன்டர்போலின் உதவி

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய ஐந்து பேரை கைது செய்ய இன்டர்போலின் உதவி நாடப்பட்டுளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு போதைப் பொருள் கடத்திய பாகிஸ்தானியர் உள்ளிட்ட ஐந்து பேரை கைதுசெய்ய இவ்வாறு இன்டர்போலின் உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அண்மையில் கைது செய்யப்பட்ட தெவுந்திர தமிழ் என்ற பாதாள உலகக் குழு உறுப்பினரிடம் நடத்திய விசாரணைகளின் போது, போதைப் பொருள் வர்த்தக வலையமைப்பு பற்றிய முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தகவல்களின் அடிப்படையில் முக்கிய வர்த்தகர் சிலர் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். (2)




சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 101 நாட்கள் புகைத்தல் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் *புகை எமக்கு பகை* எனும் தொனிப்பொருளிலான பேரணி ஒன்று அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நவாலி அரசடி மகா வித்தியாலய முன்றிலிலிருந்து வலி. தென்மேற்கு பிரதேச சபை உப அலுவலகம் வரை வழிப்புணர்வு பேரணி இடம்பெற்றதையும் நவாலியில் [illegible] புகைபிடிப்பதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் படங்கள் அடங்கிய பதாகை வைக்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களில் பௌத்த மத அடையாளச் சின்னங்கள்

## வட மா.சபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டு



(குருமன்காடு)

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களில் எங்கு அரச மரச் சூழலும் குன்றுப் பகுதிகளும் காணப்படுகின்றதோ அங்கு பௌத்த மத அடையாளங்கள் நிறுவப்பட்டு தமிழ் சமூகத்தில் திணிக்கப்பட்டு வரும் நிலை முல்லைத்தீவு மாவட்டத்திலும் தலை தூக்கியுள்ளதாக வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மக்களின் கவனத்தை இலகுவாக ஈர்க்கவல்ல பகுதிகளில் தமிழரகளின் உணர்வுகளை சிதைத்து அவர்களின் நிலத்தை அபகரித்து அங்கே பௌத்த மத அடையாளங்களை நிறுவுதல் முல்லைத்தீவு மாவட்டத்திலும் அரங்கேறிய வண்ணமுள்ளது.

கோட்டக்கேணி பிள்ளையார் கோயில் இற்றைக்கு 200 ஆண்டிலும் முன்னைய வரலாற்றினை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் மக்களின் புனித வழிபாட்டு அடையாளமாகும்.

இக் கோயிலுக்கு மணலாற்றுப் பகுதி யிலுள்ள வயல் நிலங்களுக்கு செல்லும் விவசாயிகள் வழிபாடுகளை நடத்திவிட்டு செல்வதே கிராம வழக்கமாக இருந்துள்ளது.

இது தவிர நாளாந்த பூசைகள், விசேட பூசைகள் என ஊர் மக்களின் கலாசார வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்ததாகவே மேற்படி பிள்ளையார் கோயில் காணப்பட்டது.

ஆயினும் 1983 ஆம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தற்பொழுது இங்கு வந்து குடியேறிய போது பிள்ளையார் கோயில் முன்பாக புத்தர் சிலையும் அதனை அண்டியதாக கட்டடம் ஒன்றும் அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கொக்கிளாய் பிரதேசத்தில் சமீப காலத்தில் எழுப்பப்பட்ட புத்தர் சிலையும் அதனை அண்மித்ததான கட்டடமும் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் அவர்களின் அனுமதியின்றி அரச மரம் ஒன்றின் கீழேயே அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காணியின் சொந்தக்காரரர்களால் தற்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டும் இன்னும் தீர்வு கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் 200 ஆண்டுகளுக்கும் மேலாக ஒதியமலை மக்களின் புனித வழிபாட்டு தலமாக இருந்து வந்துள்ள மலையடி வைரவர் கோயில் பகுதி இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு புத்தர் சிலை அமையபெற்றுவிடுமோ என்ற எண்ணம் ஒதியமலை மக்களை ஆட்கொண்டுள்ளது.

அத்தோடு, ஒட்டுசுட்டான் பகுதியில் இராணுவ முகாம் அமைத்து அதனுள் பெரிய அளவில் விகாரை கட்டப்பட்டுள்ளது.

வட்டுவாகல் கன்னிமார் கோயிலுக்கு அண்மையிலும் விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர்களின் மத அடையாளங்கள் அழிக்கப்படுவதும் பௌத்தமத அடையாளங்கள் நிறுவப்படுவதும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இவ்வாறு ஆங்காங்கே நிறுவப்படும் பௌத்த மத அடையாளங்கள் காலப்போக்கில் தமிழர் தேசங்களில் பௌத்த மதம் இருந்தமைக்கான ஆதாரங்களாக கொள்ளப்பட்டு பௌத்த மத சிங்கள குடியேற்றங்களின் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகளுக்கு ஏதுவாக அமைந்துவிடும் என்ற நிலையும் இங்கு கவனிக்கப்படவேண்டியதாகிறது என்றார். (2-9-250)




## திருக்குறள் மனனப் போட்டி; மாணவி முதலாமிடம்



(கிளிநொச்சி)

யாழ். சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட புண்ணிய நாச்சியம்மையார் தினம் தொடர்பான திருக்குறள் மனனப் போட்டியில் கீழ்ப் பிரிவில் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவி பாமகள் சண்முகராஜா முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (2-9-254)

## பெண்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மாவட்ட செயலகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பெண்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் டிப்போ சந்திக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமைகாலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனால் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-254)

# இணையச் சேவைகளை திறம்பட மாணவர்களுக்கு வழங்குவதற்கு

## தீர்மானங்கள் நிறைவேற்றம்

(கிளிநொச்சி)

இணையச் சேவை வழங்கும் நிலையத்தின் உரிமையாளர்களுக்கு மாணவர்கள் இணையத்தை பார்வையிடுவது தொடர்பான கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல் மற்றும் மாணவர்களுக்கு இணையச் சேவைகளை திறம்பட வழங்குவதை மேற்பார்வை செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இணையச் சேவை தொடர்பாக பல்வேறு தீமானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்படி பாடசாலை நேரத்தில் மாணவர்கள் இணையச் சேவை வழங்கும் நிலையங்களுக்கு செல்வது தடைசெய்தல்,

இணையச் சேவைகளை உபயோக்கிகும் மாணவர்களின் பெயர், முகவரி, பாவிக்கும் நேரம், பாடசாலையின் பெயர் ஆகியவற்றை உள்ளடக்கிய பதிவேடு ஒன்றை உபயோகித்தல்,


இணையத்தை பார்வையிடும் மாணவர்கள் என்ன விடயத்தை பார்வையிடுகின்றனர் என்பதை இடையிடையே கண்காணிப்பு செய்தல், கணனி உள்ள இடத்தை மூடப்பட்ட இடமாக இல்லாமல் திறந்து நிலையில் வைத்திருத்தல்,

இணையச் சேவை நிறுவனத்திற்கு ஒரு மாணவர் தொடர்ந்து வருவாராயின் அவரது பெயர், முகவரி, பாடசாலையின் பெயர் போன்றவற்றை தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கு தெரியப்படுத்துதல்,

க.பொ.த.சாதாரண தரத்துடன் கல்வியை நிறுத்தியவராக கூறும் ஒருவரின் வயதை உறுதி செய்யும் விதமாக தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை பதிவு செய்தல்,

மாணவர்கள் பாவிக்க கூடாத இணையச் சேவைகளை பாவிப்பதை தடுக்க கூடிய விதமான கண்காணிப்புக்களை செய்தல் போன்றனவற்றை நடைமுறைப்படுத்துவதாக இக் கலந்துரையாடலினூடாக தீர்மானிக்கப்பட்டது. (2-9-254)

## நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்துடன் கார் மோதியதில் இருவர் படுகாயம்!



(பூந்தோட்டம்)

வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவிலிருந்து மாங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டது.

அவ்வேளையில் வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.


இவ்விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-9-250-266)

# முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் சார்பாக கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் நான்கு வருடங்களின் பின்னர் முதன் முதலாக சர்வதேச மகளிர் தினம் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரனால் முன்னெடுக்கப்பட்டதோடு மகஜர் ஒன்றும் வடமாகாண சபை முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பங்குபற்றிய பெண்களில் பத்துப்பேர் தெரிவு செய்யப்பட்டு தலா 5 ஆயிரம் ரூபா வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டுள்ளது.




அத்தோடு மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளரினால் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் சார்பாக போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் குரல் எனும் தலைப் பில் ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங் கிய மகஜர் ஒன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவதாஸ் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் திருமதி மேரி கமலா ஆகியோ[illegible] கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் காணாமற் போன, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு நட்டஈடு பெற்றுக் கொடுத்தல், உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டுள்ள பிரதேசங்களை மீள வழங்க வேண்டுமென்று அளிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்தி சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுதல், அன்றாட வாழ்க்கை தேவைக்காக உறவினர், நண்பர் மற்றும் வாடகை வீடுகளிலிருந்து அல்லலுறும் பெண்களுக்கு வாழ்வாதார வசதிகள் செய்து கொடுத்தல்,

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட் முஸ்லிம் குடும்பங்களையும் சொந்த இடங்களில் மீளக்குடியேற சகல தரப்பும் ஒத்துழைப்பு வழங்குதல், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்படல் வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ள மேற்குலக நாடுகள் முயற்சி

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தில் ஈடுபட்டு அதில் தோல்வியடை ந்தால் உள்நாட்டில் எதிர்ப்பையும் வெற்றி பெற்றால் சர்வதேச எதிர்ப்பையும் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை ஜனாதிபதி அறிந்திருந்ததாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடுவலை கொத்தலாவல பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரில் தோற்றுப் போயிருந்தால் மக்கள் அடுத்த தேர்தலில் அரசாங்கத்தை விரட்டியிருப்பார்கள்.

போரில் வென்றால் மக்களிடம் இருந்து வரும் இந்த அச்சுறுத் தலை எதிர்கொள்ளத் தேவையில்லை. நாட்டில் உள்ள மக்கள் வலு வான நிலையில் அரசாங்கத்துடன் உள்ளனர்.

போரில் வெற்றி பெற்றதால், விடுதலைப் புலிகளை போஷித்த, புலம்பெயர் தமிழர்களின் தாளத்திற்கு ஆடும் சர்வதேசம் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகிறது.

போரில் தோல்வியடைந்திருந்தால், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்களை சர்வதேச நாடுகள் சுமத்தாது.

போரில் வென்று நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லும் சந்தர்ப்பத்தில் அதனை தடுத்து நிறுத்தி நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ள அமெரிக்க உள்ளிட்ட மேற் குலக நாடுகள் முயற்சித்து வருகின்றன என அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### இன்னாசிமுத்து அலோசியஸ் போல்

வசாவிளான் ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் புத்தூரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து அலோசியஸ் போல் (ஓய்வு பெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்) நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று காலை 10 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் அச்சுவேலி சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சோமசேகரம்பிள்ளை கிறிஸ்ரிநோமன்

புலோலியை பிறப்பிடமாகவும் ஜேர்மனி Neuss ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம்பிள்ளை கிறிஸ்ரிநோமன் கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு St, Josef Gladbacher StraBe 3 , 41462 Neuss , Germany என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி நடராஜா காந்திமதி

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா காந்திமதி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஜெகதீஸ்வரன் பவானி

கொழும்பை பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் பவானி கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு StMarylebone Crematorium, East Finchley, London, N2 0RZ United Kingdom என்னும் முகவரியில் நடைபெறும்.

# இலங்கை-இந்திய மீனவர்கள் கலந்துரையாடல்; ஆறு அம்சக்கோரிக்கைகள் முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய -இலங்கை மீனவர்களுக்கிடையில் நாளை நடைபெறவுள்ள கலந்துரையாடல் தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் 6 கோரிக்கைகளினை முன் வைத்துள்ளது.

இது தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என். இன்பம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய இழுவைப் படகுகளினால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றவர்கள் வடபுலத்து மீனவர்களே . எனினும் 13 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற பேச்சுவார்த்தை தொடர்பாக இதுவரை வடக்கிலுள்ள கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுடனோ, அமைச்சரினால் உருவாக்கப்பட்ட கிராமிய கடற்றொழில் சம்மேளனங்களோடு எந்தவிதமான கலந் துரையாடல்களும் செய்யப்படவில்லை. அத்தோடு சாதாரண மீனவர்களின் கருத்துகளும் பெறப்படவில்லை. மீனவர்களின் கலந்துரையாடல்களின் வழியாக இப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வைப் பெறமுடியுமென இரு நாட்டு அரசுகளும் நம்புகின்றபடியால் உள்ளக மீனவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். எனினும் இலங்கை அரசு அதை தவறவிட்டுள்ளது.

இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது கடற்றொழில் அமைச்சர் தனக்கு விருப்பமான மீனவப் பிரதிநிதிகளை பங்குபற்றச் செய்வது என்பது பிரதிபலனைத் தராது.

ஆகவே நாம் கோருவது, எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறும் கலந்துரையாடலுக்கு முன்பதாக மாவட்ட மட்ட மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துகளைப் பெற வேண்டும். பேச்சுவார்த்தையில் ஈடுபட போகும் மீனவப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து இலங்கை பக்கமாக முன்வைக்கப்போகும் ஆலோசனை தொடர்பாக திட்டம் தயாரிக்க வேண்டும்,அத்தோடு பேச்சுவார்த்தையில் அமைச்சருக்கு நெருக்கமான மற்றும் அமைச்சரால் உருவாக்கப்பட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகளை விட மிக அனுபவமிக்க மற்றும் இதுவரை இப் பிரச்சினைக்காக பலவழிகளில் போராடியுள்ள கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்க தலைவர்களை பங்குபற்றச் செய்ய வேண்டும்,

இந்தியாவில் திணிக்கப்படும் தீர்வுகளை ஏற்றுக் கொள்ளாமல் எமது மீனவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் வகையிலான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும்,

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் சகலவிதமான வெளிநாட்டுப் படகுகளையும் தடுக்கும் வகையில் நிரந்தரமான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்,

இலங்கை கடற்பரப்பில் செயற்படுத்தப்படும் சகலவிதமான சட்டவிரோத மீன்பிடி முறைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்,

யாழ்ப்பாணத்தின் வலி .வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் சுமார் 8 ஆயிரம் மீனவக் குடும்பங்களை மீளக்குடியேற்றி அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவ நிலங்களை மீனவர்களுக்கு கையளித்து அவர்கள் சுதந்திரமாக தொழிலைச் செய்வதற்கான நிலையை உறுதிப்படுத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-4)

# பாப்பரசரின் இலங்கை விஜயம் குறித்து உறுதியாகவில்லை

பாப்பரசர் பிரான்ஸிஸ் தென் கொரிய பயணம் குறித்து உறுதி யாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதன் போது இலங்கை வருவாரா என்று கூறப்படவில்லை.

நேற்றுமுன்தினம் வத்திக்கான் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், பாப்பரசர் பிரான்ஸிஸ் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையில் தென்கொரியாவுக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தமது ஆசிய நாடுகளின் விஜயத்தின் ஒரு அங்கமாகவே தென்கொரியா பயணிக்கிறார்.

எனினும் அவர் இந்த விஜயத் தன போது இலங்கைக்கும் செல்வாரா? என்பது தொடர்பில் தகவல் குறிப்பிடப்படவில்லை.

இந்த நிலையில் அவரும் பெரும்பாலும் இலங்கைக்கு விஜயம் செய்ய மாட்டார் என்றே தெரிவிக்கப்படுகிறது. (2)

# இனம், மதம் நட்புறவில் களங்கம் ஏற்படுத்த இடமளியோம்

(கொழும்பு)

இன மற்றும் மதம் காரணமாக மக்களிடையே காணப்படும் நட்புறவில் களங்கம் ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என பிரதமர் கலாநிதி தி.மு.ஜயரத்ன கூறியுள்ளார்.

முஹம்மது நபி அவர்களின் பிறந்த தினத்தினைக் கொண்டாடும் முகமாக ஏராளமான முஸ்லிம்களின் பங்கேற்புடன் அண்மையில் கிரேன்ட்பாஸ் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற வைபவத்தின் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தொன்றுதொட்டு இந்த நாட்டில் பல இனத்தவர்களும் சிங்களவர்களுடன் பேணிவரும் பிணைப்பினை எக்காரணம் கொண்டும் உடைப்பதற்கு இடமளிக்கமாட்டோம்.

இந்த நாட்டு மக்கள் தற்போது ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்ந்தாலும் சிலர் அந்தச் சகவாழ்வினை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும் அவ்வாறான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இன மற்றும் மதரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான எமது அரசாங்கம் எப்போதும் சமாதானத்தை மதிக்கும் ஓர் அரசாகும்.

அதனால் நாம் எந்தவகையிலும் மத ரீதியாக அல்லது இன ரீதியாக பிரச்சினைகள் ஏற்படும் நிலைமையை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை.

சிங்கள, தமிழ்,முஸ்லிம், பறங்கியர் மற்றும் மலாயர் போன்ற சகல இனத்தவர்களும் சகோதரத்துவத்துடன் வாழவேண்டும். சகல மதங்களும் எதிர்பார்ப்பதும் இதனையே ஆகும்.

மதங்கள்,மனிதர்களைப் பாவத்திலிருந்து மீட்டு அவர்களை நற்பண்புமிக்க மனிதர்களாக சமூகத்தில் வாழ்வதற்கு வழிகாட்டுகின்றன.

நாம் ஆயிரத்து 400 வருடங்கள் ஒற்றுமையாக வாழ்கின்றோம். அந்த உறவைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நாம் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வும் இங்கு சுட்டிக்காட்டினார். (2)

# கௌரவிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் கௌரவிப்பு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் வேலணை பிரதேச செயலக தொழில்நுட்ப அலுவலர் பஞ்சாட்சரம் ஞானபண்டிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் 90 ஆவது அகவையை பூர்த்தி செய்தவர்களான நாகலிங்கம் மகாலிங்கம், முருகேசன் செல்லையா க.பொ.த (உயர்தரம்) 2013 இல் 3 ஏ பெற்ற பிரதேச மாணவன் விவேகானந்தன் யதுர்ஷன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவிற்கு ஆதரவளிக்கப்படும்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(வத்தளை)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வத்தளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சில அரசியல் கட்சிகள் கோருவதற்காக அரசாங்கத்தை விட்டு விலகிக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில உள் நோக்கங்களைக் கொண்ட தரப்பினர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆளும் கட்சியிலிருந்து வெளியேற்ற சதித் திட்டம் தீட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவதனை உறுதி செய்வதற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கியது என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் அடிப்படையில், கூட்டணியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அளித்து வரும் ஆதரவு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டால் ஆளும் கட்சியினால் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விடும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் யதார்த்தை புரிந்து கொள்ள சில தரப்பினர் முஸ்லிம் காங்கிரஸை ஆளும் கட்சியிலிருந்து வெளியேற்றுவதில் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணசிங்க பிரேமதாச ஆகியோரை ஆட்சி பீடத்தில் ஏற்றுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முக்கிய ஒத்துழைப்பை வழங்கியிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்து வெளியேறிய சந்திரிகாவின் ஆட்சி ஐந்து மாத காலம் கூட நீடிக்கவில்லை என்பதனை சுட்டிக்காட்ட விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (2)

# வாஸ் குணவர்த்தனவின் கோரிக்கை நீதிமன்றத்தினால் நிராகரிப்பு



(கொழும்பு)

பம்பலப்பிட்டியை சேர்ந்த வர்த்தகர் மொஹமட் ஷியாம் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களிடம் பேச அனுமதி வழங்க கோரி, அந்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கொலை வழக்கு தொடர்பான விசாரணை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இந்த கோரிக்கையை விடுத்திருந்ததுடன், மேலதிக நீதவான் மொஹமட் சஹாப்தீன் நிராகரித்தார்.

அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராகவும் சட்டமா அதிபர் தனித் தனியாக குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளதால், சந்தேக நபரின் கோரிக்கைக்கு அனுமதி வழங்க முடியாது என மேலதிக நீதவான் குறிப்பிட்டார்.

வழக்கு விசாரணையின் போது வாஸ் குணவர்தன, அவரது மகன் உள்ளிட்ட 7 சந்தேக நபர்களை சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

முறைப்பாட்டாளர் தரப்பின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான புலனாய்வு பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, மொஹமட் ஷியாம் கொலை செய்யப்பட்ட பின்னர், அந்த கொலை சம்பந்தமாக பெறப்பட்ட காணொளிகள் சட்ட வைத்திய அதிகாரியிடம் இருப்பதால், அதனை நீதிமன்றத்திடம் வழங்குமாறு உத்தரவிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்தக் கோரிக்கைக்கு அனுமதி வழங்கிய நீதவான், குறித்த காணொளிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்துள்ள போதிலும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் தினம் அறிவிக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டதுடன் அதனை நீதிமன்றத்திற்கு அறிய தருவதாகவும் அபேசேகர குறிப்பிட்டார். (2)

# வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது



(உடுபுஸ்செல்லாவ)

சட்டவிரோதமான முறையில் வல்லப்பட்டை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் உடுபுஸ்செல்லாவ, கொன்கொல்ல மடுல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுபுஸ்செல்லாவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 7 கிலோ கிராம் வல்லப்பட்டை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொன்கொல்ல, மடுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதானவர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் வலப்பனே நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (2)

# நாட்டு மக்களின் ஆதரவு இருக்கும்வரை ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

(ரத்மலானை)

**எவரது தாளத்திற்கும் ஏற்ற வகையில் ஆட்டம் போடத் தயாரில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ரத்மலானையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எந்த சக்தியினாலும் அரசாங்கத்தை பதவி விலக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் ஆதரவு இருக்கும் வரையில் வேறு சக்திகளினால் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சில சக்திகள் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த பல்வேறு வழிகளில் முனைப்புக்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும், மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை அரசாங்கத்தின் மீது இருப்பதனால் இந்த முனைப்புக்கள் வெற்றியளிக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் தேவைகள் அவசியங்களின் அடிப்படையில் நடந்து கொள்ள அரசாங்கம் தயாரில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு வரையில் நாட்டை நிர்வாகம் செய்ய மக்கள் அதிகாரம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்தலை நடத்த முடியும். நாட்டில் மீண்டும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓட வேண்டுமென ஒரு சிலர் கனவு காண்கின்றனர் எனவும் அந்த கனவு பலிக்க அரசாங்கம் இடமளிக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் சிங்கள முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றும் பொறுப்பு அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.



இரண்டு தசாப்த காலத்திற்கு முன்னதாக சிங்கள முஸ்லிம் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் விரட்டியடித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்படுவதற்கு அந்தப் பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளியிடவில்லை எனவும் சில அரசியல்வாதிகளும் வெளிநாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுமே எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு இடத்திலும் எந்தவொரு இன மக்களும் வாழக் கூடிய சூழ்நிலை இருக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். (2)




பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வை அண்மையில் நடத்தியது. இந் நிகழ்வில், பருத்தித்துறை வர்த்தகர் பொன்.இராசதுரை மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வங்கி முகாமையாளர் எஸ்.ஸ்ரீதரன் உட்பட விருந்தினர்கள் நிற்பதையும் சிவஸ்ரீ மகா கணபதி சிவானந்தராஜக் குருக்கள் ஆசியுரை வழங்குவதையும் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- தும்பளை செய்தியாளர்)

வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் உள்ள சத்தியத்தைப் பொறுத்தது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# காலம் பிழைத்தால் குரங்கிற்கும் கொப்பு வழுக்கும்

மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப் பிழக்கப் பாயாது என்பது நம் தமிழ்ப் பழமொழி. பழமொழியின் உட்பொருள் குரங்கின் இலக்குத் தவறாத திறமையை உணர்த்துவதாக அமைகின்றது.

எனினும் ஆபிரிக்க நாட்டுப் பழமொழி காலம் பிழைத்தால் குரங்கிற்கும் கொப்பு வழுக்கும் எனக் கூறுவதாக நம் தமிழ் மண்ணின் நாடறிந்த கவிஞர் சோ.பத்மநாதன் கூறுவார்.

இங்குதான் தமிழ்ப் பழமொழியின் பலவீனம் தெரிகிறது. அதாவது யானைக்கும் அடி சறுக்கும் என்று குறிப்பிட்ட தமிழ்ப் பழமொழி குரங்கிற்கு மரம் சறுக்காது என்பது போல பொருள் கற்பிக்கின்றது.

உண்மையில், குரங்கிற்கும் கொப்பு வழுக்கும் என்ற ஆபிரிக்கப் பழமொழி நம் தமிழ் மொழியில் இல்லையாயினும், அப் பழமொழி நம் நாட்டுக் குரங்குகளிற்கும் பொருந்தும் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

எங்கள் மொழியில் குறித்த பழமொழி- தத்துவம் இல்லை என்பதற்காக, உலக நாட்டுத் தத்துவங்கள்- பழமொழிகள் நமக்குப் பொருந்தாது என்று நினைப்பது மகா மடமைத்தனம்.

ஆக, எங்களிடம் இல்லாத உலக தத்துவங்கள் எங்களுக்கும் பொருந்தும் என்பதை ஏற்றுக் கொள்வது அவசியம்.

மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப் பிழக்கப் பாயாது என்ற பழமொழிக்காக இலங்கைக் குரங்குகளை மரங்கள் சறுக்கி விடுவதில்லை என்று யாரும் நினைத்துவிடலாகாது.

என்னை எதுவும் செய்ய முடியாது. நான் நினைத்ததே நடக்கும் என்று கூறிய பலர் சறுக்கி விழுந்த சம்பவங்கள் நிறையவே உண்டு.

ஆகையால் ஆபத்துக்கள், அழிவுகள் எந்த வடிவங்களிலும் வரலாம் என்ற உண்மையை உணர்ந்து கொண்டு அதற்கேற்றால் போல் தர்மவழி நின்று வாழ்வதே புத்திசாலித்தனம்.

இதைவிடுத்து காடிருக்கிறது மரமிருக்கிறது கொப்பிருக்கிறது நான் பாய்வேன்; தாவுவேன். அந்தப் பாய்ச்சலில், தாவலில், குருவிக் கூடுகள் அதனுள் இருக்கும் குஞ்சுகள், இயலாப் பறவைகள் என எது பற்றியும் சிந்திக்காமல் மரம் பாய்வதாக நினைத்து குரங்கு(கள்) தாவித் திரியுமாயின் என்றோ ஒருநாள் காலம் பிழைக்கையில் குரங்கிற்கும் மரம் சறுக்கும்.

அப்போது குரங்கு கீழே விழும். வீழ்ந்த குரங்கு மீண்டு(ம்) எழுந்து மரம் தாவுதல் என்பது ஆபத்தானது; பயம் தரக் கூடியது.

காலப் பிழை கடுமை என்றால், சறுக்கிய கொப்பில் இருந்து தேன் கூடு அறுந்து கீழே விழ, நாரி முறிந்த குரங்கை தேனீக்கள் தங்கள் இஷ்டம் போல கொட்டித் தள்ளும்.

இதில் இன்னும் ஒரு வேதனை. கூட இருந்து தாவித் திரிந்த குரங்குகளின் ஏளனப் பார்வை.

ஆக, காலம் பிழைத்தால் குரங்கிற்கும் கொப்பு வழுக்கும் என்ற ஆபிரிக்கப் பழமொழியை, எப்போதும் சிந்தையில் இருத்திக் கொள்வது யாவர்க்கும் நலம் தரும்.

# சட்டவிரோத மீன்பிடியை தடுத்து நிறுத்த வடமாகாணத்தில் விழிப்புணர்வு நடவடிக்கை

## கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

கடல் வளத்தை அழிக்கும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவென கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சரினால் பல மில்லியன் ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் க.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை யாழ். மீடியா கிளப்பில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அவர் யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் கடல் வளம் அழிக்கப்படுவது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மேலும் தெரிவித்ததாவது,

இன்று யாழ்ப்பாணத்தில் பொருளாதாரத்தை பாதுகாக்கின்ற இரண்டு தொழில்கள் உள்ளன. அதில் ஒன்று விவசாயம், மற்றையது கடற்றொழில், கடற்றொழிலை பொறுத்தமட்டில் வெளிநாட்டு வருமானத்தை பெற்றுக்கொடுக்ககூடிய அதாவது அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுக்கக் கூடியவர்களாக கடற்றொழிலாளர்களே உள்ளனர்.

ஆனால் இதில் சிலர் சட்டவிரோதமான முறையில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் எமது பிரதேசத்திலுள்ள கடல்வளம் முற்றாக அழிக்கப்பட்டு வருகின்றது.

ஒரு புறம் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் எமது பிரதேச கடல்வளம் சுரண்டப்பட்டுவரும் நிலையில் இங்குள்ள கடற்றொழிலாளர்களே எமது பிரதேச கடல்வளத்தை அழிக்கும் தொழில் நடவடிக்கைளில் ஈடுபடுவது எதிர் காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

கடல்வளத்தை அழிக்கும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க முற்படும் போது அந்த தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் எம்முடன் முரணபடுகின்றனரே தவிர அந்தத் தொழில் நடவடிக்கைகளை கைவிடத் தயாரில்லை.

எனவேதான் மேற்படி விடயத்தை கருத்தில் கொண்ட அமைச்சர் ராஜித சேனாரட்ன யாழ்.மாவட்டம் உட்பட வட பகுதியிலுள்ள கடல் வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் மீனவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளார்.

இதற்கென பல மில்லியன் ரூபாய் பணத்தையும் ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளார் எனவும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த சிவில் சமூகப்பிரதிநிதிகள் குழுவின் ஊடாக பல செயற்பாடுகளை முன்னெடுக்கத்திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படிச் சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட சிவில் சமூகத்தின் தலைவர் ஐ.தர்மகுலசிங்கம், செயலாளர் மு.ஸ்ரீபதி, பொருளாளர் சு.விஜயகாந்த் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர். (2-6)

# 800 மில்லியன் ரூபா செலவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டடம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சீனா அரசாங்கத்தின் 800 மில்லியன் ரூபா செலவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புதிய கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்படவுள்ளதாகவும், அதற்கான அமைச்சரவைப் பத்திரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று யாழிலுள்ள அமைச்சரின செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது காணப்படும் ஆளணி வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதுடன், தற்போது வைத்தியசாலையில் தற்காலிகமாக பணியாற்றி வரும் 156 தொண்டர்களுக்கு மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக மாதாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, வைத்திய சேவைகள், சிகிச்சைக் கூடங்களினதும் ஆய்வு கூடங்களினதும் செயற்பாடுகள், நோயாளர் விடுதிகள், வைத்தியசாலையின பாதுகாப்பு, துவிச்சக்கர வண்டி தரிப்பிடம், சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் பற்றாக்குறைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

இதனிடையே, வைத்தியசாலை நிர்வாகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக புனரமைக்கப்பட வேண்டிய வைத்தியசாலை உள்ளக வீதியினை உடனடியாக புனரமைக்குமாறு யாழ். மாநகர சபை முதல்வருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். (2-6)

# 6 குறும்படங்களின் வீடியோ காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞான பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய 6 குறும்படங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 4 மணிவரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார்.

மகளிர் அபிவிருத்தி நிலையம் தயாரித்த சருகு, கானல், கதவு, திறக்கட்டும், சதை தின்னிகள், மிஸ்கோல், கழுகுகள் எனும் 6 குறும்படங்களே வீடியோ காட்சியாக இடம்பெறவுள்ளன.

இக்குறும்படக் காட்சியின் பின்னர் படங்கள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் பட இயக்குநர்களும் நடிகர் சிலரும் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே ஆர்வலர்கள் வருகை தந்து பயன்பெறுமாறு யாழ். விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞான பிரிவினர் கேட்டுள்ளனர். (2)

# ஹெரோயின் வைத்திருந்த இளைஞர்கள் கைது

(பொலநறுவை)

2 கிராம் 75 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நால்வர் பொலநறுவை-கதுருவெல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் கொழும்பு - குறுந்துவத்தை ஹோட்டல் ஒன்றில் வேலை செய்பவர் எனவும் அவரே கொழும்பில் இருந்து ஹெரோயின் கொண்டு சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பொலநறுவை நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (2)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## கடவுளை அடைய மூன்று வழிகள்



✦ வாழ்வு என்னும் கடலில் வேகமாக முன்னேற விரும்பினால் செய்ய வேண்டியது ஒன்றே. உங்கள் மனப்படகின் பாயை விரித்து விடுங்கள். ஆண்டவனுடைய அருட்காற்று இரவுபகலாக உங்களின் தலைக்கு மேல் வீசும்.

✦ இறைவனிடம் தன் மனதை ஒப்படைத்தவன் தீய எண்ணம் படைத்தவர்களுடன் இருந்தாலும் எந்தவிதமான தீமையையும் அடையமாட்டான்.

✦ மனிதன் இறைவனை எங்கு தேடியும் காணாமல் அலைகிறான். அதை அறிந்து கொள்ளாது அவன் உலகெல்லாம் தேடி அலைந்து திரிகிறான். அவன் தேடும் இறைவன் அவன் உள்ளத்திலேயே வீற்றிருப்பதை உணராமல் தவிக்கிறான்.

✦ வேக வைத்த நெல்லை பூமியில் விதைத்தால் அது முளைப்பதில்லை. அதுபோல, உண்மை ஞானம் என்னும் நெருப்பினில் புடமிட்ட உயிர்கள் மீண்டும் மண்ணுலகம் வருவதில்லை. ஆனால், அஞ்ஞானம் கொண்டு அலையும் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன.

✦ இல்லறத்தில் இருப்போர் உயிர்களிடத்தில் அன்பு, எளியவர்களுக்குச் சேவை, கடவுளின் திருநாமத்தில் பக்தி இவற்றை தவறாது பின்பற்றி வந்தாலே கடவுளை அடைய முடியும்.

✦ தன் உண்மைத் தன்மையை மறைத்து வெறும் வேஷம் போடுபவனும், எதிலும் தன்னை மட்டுமே முன்னிறுத்தி சுயலாப நோக்கத்தோடு செயல் புரிபவனும், பிறருக்கு அநீதி இழைப்பவனும், ஒழுக்கநெறி தவறுபவனும் என்றைக்கும் கடவுளை அடைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக



உடுவில் பிரதேச இளைஞர்கழக சம்மேளனம் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றினை நடத்தப்படவுள்ளது.

அணிக்கு 5ஓவர்கள் 7 பேர் கொண்ட போட்டிகளாக இவை அமையவுள்ளன. போட்டிகள் 15, 16 ஆம் திகதிகளில் சுன்னாகம் காந்திநியூஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 6623031 / 077 9849902 ஆகிய இலக்கங்களுடன் நாளை வியாழக்கிழமைக்கு முன்பாக தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-23)

## வலைப்பந்தாட்டப் போட்டி; அராலி சரஸ்வதி சம்பியன்



சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றது.

இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய இளைஞர் கழக அணியை எதிர்த்து விக்டோரியா இளைஞர் கழக அணி எதிர்கொண்டது.

இப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தி இளைஞர் கழக அணி 16:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது. (க-23)


வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# மானிப்பாய் சுப்பர்கிங்ஸ் கிரிக்கெட்; குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்











மானிப்பாய் சுப்பர்கிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியனாகியது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இடம்பெற்று வந்த போட்டிகளின் இறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களை பெற்றது. இதில் மோகன் 42, சிந்து 15, ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் டிக்சன் மற்றும் பவீந்திரன் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 77 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி ஷெல்டனின் அதிரடி கைகொடுக்க 4.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. இதில் ஷெல்டன் 43, அஜன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருண், சுஜன், சிந்து ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரனாக குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக வீரன் ஷெல்ரன், சிறந்த துடுப்பாட்ட வீரனாக கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி வீரன் மோகன், சிறந்த பந்துவீச்சாளராக குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக வீரன் அஜன் ஆகியோர் தெரிவானார்கள்.

இவர்களுக்கான பரிசில்களை வடக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் இணைப்பாளரும் வடமாகாணசபை உறுப்பினருமான இ.ஆர்னல்ட் உள்ளிட்ட விருந்தினர்கள் வழங்கினர். (க-23)

# சண்டிலிப்பாய் கோட்ட கரப்பந்து; சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

கரப்பந்தாட்டத்தில் ஆண்களுக்கான மூன்று பிரிவுகள் உட்பட நான்கு பிரிவுகளில் சம்பியனாகியது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில்,

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் பெற்றன.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையும்,3 ஆம் இடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் பெற்றன.

15வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையும் 3 ஆம் இடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் பெற்றன.

பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில,

19 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் பெற்றது.

17 வயதுப் பிரிவுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம் சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் பெற்றன.

15 வயதுப் பிரிவுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை பிரான்பற்று கலைமகள் வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம மகா வித்தியாலயமும் பெற்றன. (க-23)










யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் 108 ஆவது மாபெரும் துடுப்பாட்டப் போட்டியின் ஆரம்ப வைபவத்தின் போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாபெரும் போர் நாளை ஆரம்பம்



யாழ்.மத்திய கல்லூரி



சென்.ஜோன்ஸ் கல்லூரி

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பமாகின்றது.



## இருபது-20 உலக கிண்ண இங்கிலாந்து அணியில் பெல்

இங்கிலாந்து அணியின் பேட்ஸ்மேன் ஜோ ரூட் கடந்த வாரம் வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான ஒருநாள் போட்டியின்போது இவரது கட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

இந்த காயம் காரணமாக ஜோ ரூட் 20 ஓவர் உலக கோப்பை போட்டியில் இருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக இயன் பெல் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கு ஐ.சி.சி.யும் ஒப்புதல் அளித்துவிட்டது. பெல் 20 ஓவர் போட்டியில் விளையாடி 3 ஆண்டுக்கு மேல் ஆகிறது. (க)

## மெஸியை முந்தினார் ரொனால்டோ

கால்பந்தாட்ட உலகில் முடி சூடா மன்னனாக வலம் வரும் மெஸியை ரொனால்டோ முந்தியுள்ளார்.

சர்வதேச கால்பந்து உலகில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலை கோல்.காம் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இதில் கடந்த ஜனவரியில் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை வென்ற போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ரூ.1,240 கோடி மதிப்புடன் முதலிடத்தில் உள்ளார்.

ஆர்ஜென்டினாவைச் சோந்த பார்சிலோனா கிளப் அணி வீரர் மெஸி ரூ.1,220 கோடி மதிப்புடன் 2-வது இடத்தில் உள்ளார். (க)



## நானும் பந்து வீசுவேன் புஜாரா

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் தடுப்புச்சுவர் ராகுல் டிராவிட்டின் இடத்தை பிடித்திருப்பவர் புஜாரா. இவர் தற்போது ஒருநாள் போட்டிகளிலும் களமிறங்கி விளையாடி வருகிறார். பேட்ஸ்மேனான இவர் தற்போது பந்துவீச்சாளர் அவதாரம் எடுக்க முயன்று வருகிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "எனது கிரிக்கெட் வாழ்க்கையை நான் பகுதி நேர பந்துவீச்சாளராகதான் தொடங்கினேன். எனது அணியின் கேப்டன் விரும்பினால் நான் பந்து வீசுவேன். வருகிற ஐ.பி.எலில் எனது பந்துவீச்சு திறமையை நிரூபித்து ஒருநாள் போட்டிகளிலும் பந்து வீச்சாளராக முத்திரை பதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது" என்று தெரிவித்தார்.

மிகச்சிறந்த டெஸ்ட் பேட்ஸ்மேனான புஜாரா ஒருநாள் அட்டவணை போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகிறார். அவரது சராசரி 55 ஆகும். ஆனால் அவர் இதுவரை இரண்டு சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடி இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இந்திய பிரயாணம் கடினமானது- பீட்டர்சன்



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியில் இடம் பிடித்துள்ள இங்கிலாந்து முன்னாள் வீரர் பீட்டர்சன் டுவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்தில் 'இந்தியாவுக்கு அவசரமாக செல்வது என்பது கடினமான விஷயமாகும் என குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணத்துக்கான இந்தியா செல்ல விசா கேட்டு இங்கிலாந்தில் உள்ள இந்திய தூதரகத்துக்கு விண்ணப்பித்து இருந்தேன். விசா பெறும் நடைமுறைக்கு 24 மணி நேரமே போதுமானதாகும். ஆனால் இந்திய தூதரகத்தில் எனது பாஸ்போர்ட் கடந்த 10 நாட்களுக்கு மேல் தூங்குகிறது' என்று தெரிவித்துள்ளார். (க)

## வழுங்கப்பட்ட அவகாசத்தில்...

பாதிக்கப்பட்டவர்கள் போர் முடிந்த 5 வருடங்களாக நியாயத்திற்காக காத்திருக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் சிலர் காணாமல் போன தமது உறவினர்கள் தொடர்பில் 10 வருடங்களுக்கு மேலாக நியாயத்தை கோரி வருகின்றனர்.

இலங்கையின் ஆளும் அரசாங்கம் மனித உரிமைகளை மீறிய நபர்களை சட்டத்திற்கு முன் கொண்டு வர எந்த நடவடிக்கைகளையும் எடுக்காவிட்டால், அவர்களுக்கு மேலும் எவ்வளவு காலம் அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் கனடா கேள்வி எழுப்பியது.

கனடாவின் இந்த கேள்வியை கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஏனைய நாடுகளும் ஏற்றுக் கொண்டன.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்கா தலைமையில் 5 நாடுகள் கொண்டு வரும் தீர்மானம் தொடர்பான இரண்டாவது கலந்துரையாடல் ஜெனிவா நேரப்படி நேற்று புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது.

அமெரிக்கா தலைமையிலான நாடுகளின் தீர்மானம் பற்றிய முதல் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றதுடன் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறிமுறை மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி வடக்கு மாகாணத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என தீர்மானத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதன் பின்னர், சர்வதேச விசாரணையில் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் பங்களிப்பு எப்படியானதாக இருக்க வேண்டும் என கலந்துரையாடப்பட்டது.

இந்த விசாரணைகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட குழுவினால் நடத்தப்பட வேண்டுமா? அல்லது பிரதிநிதி ஒருவரின் கீழ் நடத்தப்பட வேண்டுமா? எனவும் அதற்கான வழிவகைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அப்படியான அதிகாரங்கள் இல்லை என பாகிஸ்தானும் கியூபாவும் இதன்போது தெரிவித்தன.

இதற்கு பதிலளித்த இத்தாலி, சுவிஸர்லாந்து, கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள், இதற்கு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு வேறு நாடுகளில் இப்படியான விசாரணைகளை நடத்திய விதத்தை உதாரணங்களுடன் சுட்டிக் காட்டினர்.

ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவின் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் கூட இவ்வாறான விசாரணைகளை நடத்துவதற்காக வழி வகைகள் உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட உள்ள தீர்மானத்தின் மீதான திருத்தங்கள் குறித்த கலந்துரையாடல்கள் நேற்றுடன் முடிவடைந்தன. இறுதி தீர்மானம் ஒரு வாரத்திற்குள் கொண்டு வரப்பட உள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை தொடர்பில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கையின் ஜனநாயகம் குறித்து கலந்துரையாடப்பட்டது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி.எல்.பீரிஸ் - கமலேஷ் சர்மா...

நலவாய நாடுகள் மத்தியில் மனி தத்துவம் தொடர்பான எதிர்பார்ப்பு களுக்கான வழியை மேம்படுத்து வது தொடர்பில் இருவரும் கலந் துரையாடினர்.

கடந்த நவம்பர் மாதத்தில் கொழும்பில் இடம்பெற்ற பொதுநல வாய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர் பிலும் இருவரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இதேவேளை பொதுநலவாய நாடுகளின் அமைச்சு நடவடிக்கை குழுவின் கூட்டம் இந்த வார இறுதி யில் லண்டனில் இடம்பெற வுள்ளது.

இதில் தன்சானியா, நியூஸி லாந்து, சியாரா லியோன், இந்தியா, கயானா போன்ற நாடுகளின் பிரதி நிதிகள் பங்கேற்கவுள்ளனர். (எ-11)

## ஐ.நா செயலருக்கு...

எந்த கேள்விகளுக்கும் பதில் வழங்கவில்லை என்று இன்னர் சிட்டி பிரஸ் செய்தி ஊடகம் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற கேள்வி பதில் நிகழ்வின் போது, இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர்கள், சனல் 4 தொலைக்காட்சி இலங்கை இராணுவம் தொடர்பில் வெளியிட்டுள்ள புதிய காணொளி குறித்து கேள்வி எழுப்பி இருந்தனர்.

இதற்கு அவர் பதில் வழங்க வில்லை.

தொடர்ந்து யுத்தக் குற்றத்துடன் தொடர்புடைய சவேந்திர சில் வாவை ஐக்கிய நாடுகள் சபைக் கான தூதுவராக ஏற்றுக் கொண் டுள்ளமை குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு அவர் பதிலை வழங்க மறுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மனித எச்சங்களை...

கடந்த டிசம்பர் மாதத்தின் பிற் பகுதியில் இருந்து 32 தினங்கள் நடத்தப்பட்ட அகழ்வின்போது 84 மனித எலும்புக்கூடுகள் உள்ளிட்ட எச்சங்களும் வேறு சில தடயங் களும் அங்கிருந்து எடுக்கப்பட் டுள்ளன.

இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள மனித எச்சங்களுக்குரியவர்கள் ஆண்களா பெண்களா?, அவர் களுடைய வயதென்ன?, அவர்கள் எப்படி இறந்திருப்பார்கள்? என்ப வற்றைக் கண்டறிவதற்கான பகுப் பாய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருக்கின்றன.

இதன் தொடர்ச்சியாகவே, மன்னார் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியிருக்கின்றது.

“இந்த மனித புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டுள்ள மண் ணின் மாதிரிகளை பேராதனைப் பல்கலைக்கழத்திற்கு அனுப்பி ஆய்வு செய்து அறிக்கையொன் றைப் பெறுவதற்கும், புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது, புலனாய்வு துறையினரால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் என்பவற் றையும் ஆய்வு செய்து விபரங்களைப் பெறுவதற் கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது. அத்துடன் மன்னார் நில அளவைத் திணைக்கள அதிகாரிகளிடம் புதைகுழியின் வரைபடம் ஒன்றைப் பெறுமாறும் உத்தரவிடப்பட்டிருக்கின்றது என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரி வித்தார்.

"இந்தப் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டுள்ள உலோகப் பொருட்களை அணு சக்தி அதிகார சபைக்கு அனுப்பி - அவர்களின் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வுள்ளது. அதுதவிர கொழும்பு பிரதான சட்ட மருத்துவ அதிகாரியின் ஊடாக மேலதிக மருத்துவர்கள் இந்த உடல் எச்ச பரிசோத னைகளை மேற்கொள்வதற்காக வரவழைக கப்படவுள்ளனர்" என்றார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண.

இந்த ஆய்வறிக்கைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தொடர்ந்து அந்தப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்படுமா என கேட்டதற்கு, அது குறித்து தங்களால் எந்த முடிவையும் எடுக்க முடியாது என்றும், அதனை நீதிமன்றமே முடிவு செய்யும் என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். (எ-11)

## ஐ.ம.சு. கூட்டமை...

ரனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து இடை நிறுத்துவதாக சுசில் பிரேம ஜயந்த வினால் கடந்த 6ஆம் திகதி எனக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் கமலேந்திரனின் எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு யாரை நியமிப்பது தொடர்பாக தேர்தல் திணைக்களத்துடன் கலந்துரை யாடி முடிவு எடுக்கப்படுமென அந்தக் கடிதத்தில் மேலும் குறிப் பிடப்பட்டிருந்ததாக டக்ளஸ் தேவா னந்தா மேலும் தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் டானியல் றெக்சியன் கொலை செய்யப்பட்டமை தொடர் பில், கொலைக் குற்றச்சாட்டப்பட்டு வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கமலேந்திரன் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் விளக் கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## இந். மீனவர்களுக்கு...

வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனவரி மாதம் 29ஆம் திகதி ராமேஸ்வரத்தை சேர்ந்த 38 மீனவர்கள் எல்லை தாண்டி வந்ததாகக் கூறி, அவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களது 6 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் நேற்று 4-வது முறையாக ஊர்க் காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டனர். (எ-11)

## ஆவா குழுவைச் ...

இதன்போது ஆவா குழுவினர் பயன் படுத்திய பொருட்கள் சில கண்டுபிடிக்கப்பட்ட துடன் ஆவா குழுவினருடன் தொடர்புடைய வர்களும் இனம் காணப்பட்டிருந்தனர்.

இதற்கமைய விசாரணைகளைத் தீவிரப் படுத்தியிருந்த பொலிஸார் இச் சம்பவங்க ளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த முகாமிலிருந்த ஆறு பேரை நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். (எ-6)

## ஈழத்தமிழர்...

ளர்கள் 35 பேர் பட்டியலை கருணாநிதி வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக நேற்று திமுக தேர்தல் அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையை வாசிக்கத் தொடங்கிய கருணாநிதி, "திராவிட முன்னேற்றக் கழகம் வரலாற்று பாரம்பரியம் மிக்க கட்சி. கடந்த 65 ஆண்டுகளாக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, உரிமைகள் நிலைக்கச் செய்து, சமத்துவம் ஓங்க பாடுபட்டு வருகிறது. வற்றாத ஜீவநதியாக திமுக விளங்கி வருகிறது என்றார். (எ-11)

## ரணிலை சந்தித்தார்...

தயாரிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப் பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி, தமது கண்காணிப்பு திட்டம் அறிக்கை தொடர்பில் அரசாங்கத் தரப்புடனும் கலந்துரையாட உள்ளதாக தெரிவித்தார்.

அதேவேளை இந்த சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர். அரசியல் விடயங்கள் பற்றி இந்த சந்திப்பில் பேசப்படவில்லை எனக் கூறினார்.

சிறுபான்மை மதங்கள் பற்றி மட்டு மல்லாது பௌத்த மதம் பற்றியும் இதன் போது கவனம் செலுத்தப்பட வேண்டும் என தான் முன்னாள் ஜனாதிபதியிடம் தெளிவுபடுத் தியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (எ-11)

## சனல் 4இன்...

குறித்து கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கு ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனின் புதிய பேச்சாளரான ஸ்ரீபன் துஜாரிக் பதிலளிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை குறித்து கடந்த ஒரு சில தினங்களாக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டு வரும் கருத் துக்களில் மாற்றமேதும் காணப்பட வேயில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பான குறித்த காணொளியை நான் இதுவரை பார்க்கவேயில்லை. முன்னாள் ஐ.நா. வின் பேச்சாளரான மார்ட்டின் இலங்கை விவகாரம் பற்றியும் அது குறித்து செயலாளர் நாயகத்தின் நிலைப்பாடு குறித்தும் விரிவான முறையில் பேசியுள்ள தாகவே நான் கருதுகின்றேன் என அவர் தெரிவித்தார். (முன்னர் வந்த செய்தி உள்ளே.) (எ-11)


8ஆம் நாள் நிகழ்வு



அமரர்

பிலிப்பு யோசேப் செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்,
முல்லைத்தீவு)

07/03/2014 அன்று இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவனாகிய அமரர் பிலிப் யோசேப் செல்வநாயகம்
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் முல்லைத்தீவு)
அவர்களின் 8-ம் நாள் நிகழ்வு நாளை 13-03-2014 வியாழக்கிழமை
அன்று நடைபெறவுள்ளதால் இதில் உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு
ஆத்மா சாந்திக்காக வேண்டுவதுடன் அன்று நடைபெறும்
போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.
தொ.பே.:0773043232

(C-6727)

தகவல்



மேலும் 3 குடும்பங்கள்
விசா வென்றன

★ சாதனைப் பயணம் தொடர்கிறது.
ஆஸி விசா குடும்பமாக வெல்வது எளிது.
55 வயதுக்குட்பட்டவரா நீங்கள்
விரைந்து வாருங்கள் நாங்கள்
பார்த்துக் கொள்வோம்.

திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090
www.thisaivisa.com



(C-6728)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.